Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 20 வெள்ளிக்கிழமை (05.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :252

# படையினர் சூட்டு இளைஞன் மரணம்!

# பொலிஸ் அதிகாரி கடத்திக் கொலை!!

## இணுவிலில் நேற்று பெரும் களேபரம்
## வலிகாமம் முழுவதும் ஊரடங்கு அமுலில்



கடத்திக் கொல்லப்பட்ட யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன.

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 5

**இணுவில் பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் பணியாற்றும் இளைஞர் ஒருவர் நேற்றுப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். அதே கடையில் பணிபுரியும் மற்றொரு இளைஞர் காயமடைந்தார். இதனால், ஏற்பட்ட களேபரத்தின் போது யாழ். பொலீஸ் நிலைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன தாக்கப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டார்.**



உயிரிழந்த சிகையலங்கரிப்பு நிலையப் பணியாளரின் சடலம்.

**இந்தச் சம்பவங்களால் உருவான பதற்ற நிலையையடுத்து வலிகாமம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.**

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த இளைஞர்களும், பொதுமக்களும் வீதியில் திரண்டு எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கினர். அப்போது பெரும் எண்ணிக்கையான கலகம் அடக்கும் பொலீஸார் அங்கு குவிக்கப்பட்டனர். யாழ். பொலீஸ் நிலைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவும் பொலீஸ் அணி ஒன்றுடன் அங்கு வந்து சேர்ந்தார். எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை நோக்கி அவர் வந்தபோது திடீரென ஆத்திரமடைந்த மக்கள் கூட்டம் அவரை இழுத்துத் தூக்கிச் சென்றது என்றும், அவ்விடத்திலிருந்து காணாமற்போன அவர், பின்னர் இணுவில் பாலாவோடைப் பகுதியில், ஒழுங்கை ஒன்றில் வெட்டுக் காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டார் எனவும் - கூறப்படுகிறது.

இந்தக் களேபரங்களையடுத்து மருதனார்மடத்திலிருந்து இணுவில் வரை பொலீஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். அப்பகுதி எங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

**துப்பாக்கிச் சூடு!**

காங்கேசன்துறை (கே.கே.எஸ்.) வீதியில் இணுவில் சந்திக்குச் சமீபமாக உள்ள சிகையலங்கரிப்பு நிலையத்தில் நடந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்தே இந்தக் களேபரம் ஏற்பட்டது. சிகையலங்கரிப்பு

(18ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்கள் ஐவர் கைதாகி சுன்னாகம் பொலீஸ் காவலில்

யாழ்ப்பாணம்,ஓக.5

இணுவிலில் சிகையலங்கரிப்பு நிலையம் ஒன்றில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஐந்து இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிகையலங்கரிப்பு நிலையத்தில் சூட்டுக்கு இலக்காகி உயரிழந்த இளைஞனின் சடலத்தை மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் ஆஸ்பத்திரியில் பார்வையிட்டார். பிரேத பரிசோதனை நடத்தி சடலத்தை இளைஞனின் பெற்றோரிடம் கையளிக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இதேவேளை-

(18ஆம் பக்கம் பார்க்க)

## துக்கம் அனுஷ்டிக்க கோருகிறது சிகையலங்கரிப்பாளர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,ஓக.5

இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சிகையலங்கரிப்பாளருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக சகல சிகையலங்கரிப்பு நிலையங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுமாறு யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் கேட்டிருக்கிறது.

இணுவில் பகுதியில் சிகையலங்கரிப்பு நிலையம் ஒன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த சிகையலங்கரிப்பாளர் ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக ஒன்றியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கொல்லப்பட்ட சிகையலங்கரிப்பாளரின் இறுதிச்சடங்குகள் நடைபெறும் தினம் குறித்து ஒன்றியம் பின்னர் அறிவிப்பு விடுக்கும்

(18ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அழைப்பை ஜே.வி.பி. நிராகரிப்பு

கொழும்பு,ஓக.5

அமைதி முயற்சிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்த வருமாறு நோர்வே விடுத்த அழைப்பை ஜே.வி.பி. நிராகரித்துவிட்டது.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார். கொழும்பில் அவர் முக்கியமான அரசியல் கட்சிகளைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நோர்வேத் தூதரகம் செய்திருக்கிறது.

இதுதொடர்பில் ஏனைய கட்சிகளுக்கு விடுக்கப்பட்ட அழைப்பைப் போன்று ஜே.வி.பியினருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டதெனினும், அதனை ஜே.வி.பி. நிராகரித்துவிட்டதாகக் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக வட்டாரங்கள் கூறின. (ஐ-க)

## கொழும்பை வந்தடைந்தார் ஹெல்கிஸன் நேற்றுமாலையே ஜனாதிபதியுடன் சந்திப்பு

### பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்புவது பற்றி ஆராய்வு

கொழும்பு,ஓக.5

தடைப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்தும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பரஸ்பர நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவது குறித்தும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சுகளை நடத்தியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் ஒன்றரை மணிக்கு கொழும்பை வந்தடைந்த நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் மாலை 6 மணிக்குப் பின்னர் ஜனாதிபதி திருமதி குமாரதுங்கவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தார். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ், ஆலோசகர் ராம் மாணிக்கலிங்கம் ஆகியோர் இந்தப் பேச்சுகளில் கலந்துகொண்டனர்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருடன் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கர் உட்பட தூதரகத்தின்

(18ஆம் பக்கம் பார்க்க)

### பதவிக்காலம் முடிவடையும்போது

## 'விசேட பிரஜை' அந்தஸ்தை பெற முயல்கிறார் சந்திரிகா!

கொழும்பு,ஓக.5'

தனது ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் நாட்டின் 'விசேட பிரஜை' என்ற குடியுரிமை அந்தஸ்தைப் பெறுவதற்கான தீவிர முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இறங்கியிருக்கிறார் என ஜனாதிபதிக்கு நெருக்கமான உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று உதயனுக்கு உறுதியாகத் தெரிவித்தன.

இதுதொடர்பான யோசனை ஒன்றை முன்னதாக திருமதி குமாரதுங்க ஐக்கிய தேசியக்

(18ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி விஜயம் செய்ய இருக்கையில்

## எட்டு தமிழ் இளைஞர்கள் பதுளையில் திடீர் கைது!

கொழும்பு,ஓக.5

புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பதுளை ஹாலி- எலயில் 8 தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். கைதானவர்களில் இருவரைத் தவிர ஏனையோர் மட்டக்களப்பு மாவட்டத்தைச சேர்ந்தவர்களாவர்.

பதுளை, ஊவா வெல்லஸ்ஸவில் நிறுவப்படவுள்ள பல்கலைக்கழக கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டுவதற்காக நாளை மறுதினம் ஜனாதிபதி அங்கு செல்லவிருக்கிறார். இதனை

(18ஆம் பக்கம் பார்க்க)





சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற சிகையலங்கரிப்பு நிலையம்...

சலூனின் உள்ளே இரத்தம் வெளியேறிக் கிடக்கும் காட்சி...



உயிரிழந்த இளைஞனின் சடலம்...



காங்கேசன்துறை வீதியில் ரயர்கள் எரியும் காட்சி...




ஆத்திரமடைந்த மக்கள் வீதியில் திரண்ட காட்சி...

கலகமடக்கும் பொலிஸாரும் ஆத்திரமுற்ற இளைஞர்களும் எதிரெதிரே திரண்ட காட்சி...

## 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' நிதி சர்ச்சை

# பிரதமரின் வாக்குமூலத்தை புலனாய்வாளர்கள் பெறுவர்

கொழும்பு,ஓக.5

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக் கிளப்பப்பட்டு வரும் 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' விவகாரம் குறித்துப் பிரதமரிடமே வாக்குமூலம் ஒன்றைக் குற்றப் புலனாய்வாளர்கள் பெற்றுக்கொள்வர். அதற்கான வழிகாட்டுதல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

அத்தகைய வாக்குமூலம் ஒன்றைப் பெற்ற பின்னரே அந்த விடயம் தொடர்பான விசாரணைகளைத் தொடருவதா என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியாகப் பிரதமரின் வங்கிக் கணக்குக்கு வந்த 8 கோடியே 20 லட்சம் ரூபா நிதியை 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' என்ற பெயரில் தனிப்பட்ட முறையில் தொடங்கப்பட்ட வங்கிக் கணக்கு ஒன்றுக்கு மாற்றுவதற்கான உத்தரவைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார் என்றும் -

இது அரச நிதித் துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் நடவடிக்கை என்றும் -

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி, பிரதமர் மஹிந்தவுக்கு எதிராக உத்தியோகபூர்வமாகக் குற்றம் சுமத்தியிருப்பது தெரிந்ததே.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாகப் பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பிரதமரின் செயலகக் கணக்காளர் என்.ஆர்.சுபசிங்க ஆகியோரின் வாக்குமூலங்களைக் குற்றப்புலனாய்வாளர்கள் ஏற்கனவே பெற்றிருக்கின்றனர்.

அவற்றின் அடிப்படையில் பிரதமரின் வாக்குமூலம் ஒன்றும் பெறப்படவேண்டும் எனவும்-

அப்படிப் பெற்ற பின்னர் அதனைப் பரிசீலித்தே மேல் நடவடிக்கை ஏதேனும் எடுக்கவேண்டுமா?, அப்படி எடுப்பதாயின் எத்தகைய நடவடிக்கை எடுப்பது? - என்பன குறித்து முடிவு செய்ய முடியும் எனவும் - குற்றப்புலனாய்வாளர்களுக்கு சம்பந்தப்பட்ட தரப்பிலிருந்து சட்ட ஆலோசனை கூறப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

பிரதமரின் வழிகாட்டலுக்கு அமையவே மேற்படி தொகை பிரதமர் அலுவலக வங்கிக் கணக்கிலிருந்து 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டதாகப் பிரதமர் அலுவலக அதிகாரிகள் தமது வாக்குமூலங்களில் தெரிவித்திருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# கிளிநொச்சி எழுச்சி நிகழ்வுக்கான முன்னோடிச் சந்திப்பு

கிளிநொச்சி,ஓக.5

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வுக்கான முன்னோடி ஏற்பாடுகள் தொடர்பான சந்திப்புகள் கடந்த புதன்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

சகல வர்த்தக நிறுவன உரிமையாளர்களுக்கான சந்திப்பு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பாடசாலை அதிபர்களுக்குமான சந்திப்பு எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)

# இடைக்காடு - தம்பாலைப் பகுதியில் கோஷ்டி மோதல்; பலர் காயம்!

இடைக்காடு - தம்பாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கோஷ்டி மோதலில் பலர் காயமடைந்தனர். கல்வீச்சுத் தாக்குதலில் வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

செல்வச்சந்நிதி கோயில் திருவிழாவை முன்னிட்டு தம்பாலைத் தரவையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்கும் விடயம் தொடர்பாக ஆரம்பித்த கருத்து வேறுபாடே கைகலப்பில் முடிந்ததாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு மோதல் ஆரம்பித்ததாகவும்-

சரமாரியாக கல்வீச்சு இடம்பெற்றதாகவும் - கூறப்படுகிறது. ஓட்டோ சாரதி ஒருவர் கத்தி வெட்டுக் காயத்துக்கு உள்ளாகினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுவேலிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் குபேரன் மோதலில் ஈடுபட்ட இரு தரப்புகளுடனும் பேச்சு நடத்தி அமைதி நிலையை ஏற்படுத்தியுள்ளார்.(ஓ-11)

# ஆடி அமாவாசை தினமான நேற்று கீரிமலையில் பக்தர்கள் குவிந்தனர்

வலி.தென்மேற்கு,ஓக.5

ஆடி அமாவாசைத் தினமான நேற்று நூற்றுக்கணக்கான இந்துக்கள் கீரிமலையில் தமது முன்னோருக்கு பிதிர்க்கடன் நிறைவேற்றினர்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கீரிமலைக்கு இம்முறை சைக்கிள்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களில் பொதுமக்கள் செல்ல இராணுவத்தினர் அனுமதியளித்திருந்தனர்.

நேற்று அதிகாலை முதல் சேந்தான்குளம் மற்றும் தெல்லிப்பழை சோதனைச்சாவடிகள் ஊடாக பொதுமக்கள் கீரிமலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் உடல் மற்றும் பொருள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தீர்த்தத் திருவிழா நேற்று நடைபெற்றது. ஆலயத்திலிருந்து சுவாமி கீரிமலைக்கு எழுந்தருளி புனித தீர்த்தத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. அவ்வேளை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய நகுலேஸ்வர சுவாமி தீர்த்தமண்டபத்தில் எழுந்தருளினார்.

மாவைக் கந்தன் தீர்த்தமாடியதைத் தொடர்ந்து அங்கு திரண்டு நின்ற பக்தர்களும் நீராடினர். பின்னர் அவர்களில் பெரும்பாலானவர்கள் தமது முன்னோருக்கு பிதிர்க்கடன் நிறைவேற்றினர். ஆடி அமாவாசை தினமான நேற்று கீரிமலையில் குவிந்த அடியார்களுக்கு நகுலேஸ்வரர் ஆலய மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. இதேவேளை, கீரிமலைக் கடலில் நேற்று கடற்படையினரின் படகுகளும் -

கடலோரப் பகுதியில் பொலீஸார் மற்றும் இராணுவத்தினரும் - தீவிரரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (ஒ-86-135)





ஆடி அமாவாசைத் தினமான நேற்று கீரிமலைக்கு பிதிர்க்கடன் நிறைவேற்றச் சென்றவர்கள் இராணுவச் சோதனைக்காகக் காத்துநின்ற காட்சி... (படங்கள்:- நேசன்)

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பிடிக்கும்

# ஜி4 நாடுகளின் முயற்சியை முறியடிக்க அமெ.- சீனா இணைந்து செயற்பட முடிவு

நியுயோர்க்,ஓக.5

ஐ.நா. பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்த இந்தியா உள்ளிட்ட ஜி4 நாடுகள் அமைப்பு மேற்கொள்ளும் முயற்சியை முறியடிக்க அமெரிக்காவும் சீனாவும் இணைந்து செயற்பட முடிவுசெய்துள்ளன.

இதனை ஐ.நாவுக்கான சீனத் தூதர் வாக்குவாங்கியா தெரிவித்தார். முன்னதாக ஐ.நாவுக்கான அமெரிக்காவின் புதிய தூதர் ஜோன் போல்டனைச் சந்தித்துப் பேசினார் அவர்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை வேண்டும் என இந்தியா, ஜப்பான், பிரேஸில், ஜேர்மனி ஆகிய 4நாடுகள் கோரிவருகின்றன. ஆனால், இம்முயற்சியால் 191 நாடுகளைக் கொண்ட ஐ.நா. அவையில் பிளவு ஏற்படும் என அமெரிக்காவும் சீனாவும் காரணம் கூறிவருகின்றன.

ஐ.நா.பொதுச்சபையில் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினர் ஆதரவைப் பெற்றுவிட்டால் ஜி4 நாடுகளின் தீர்மானம் நிறைவேறும் சூழல் உள்ளது. ஆனால், அத்தகைய ஆதரவை ஜி4 நாடுகள் பெற்றுவிடாமல் தடுப்பதே தற்போதைய பணி என வாங்குவாங்கியா கூறினார். (ஒ)

## இந்தியாவுக்கு தலைமைப் பதவி

அடுத்த ஆண்டு ஜூலை மாதம் முதல் செயற்படவுள்ள சர்வதேச ஆழிப்பேரலை எச்சரிக்கை அமைப்பின் முதலாவது தலைமைப் பதவிக்கு இந்தியா தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்று ஐ.நா. சபையின் சர்வதேச நாடுகளுக்கு இடையோயான கடலியல் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர் பற்றீஸியா பேர்னல் தெரிவித்துள்ளார். (ஒ)

## சூடானில் தொடர்ந்தும் கலவரம்; 100 பொதுமக்கள் உயிரிழப்பு!

கார்டூம்,ஓக.5

சூடான் துணை ஜனாதிபதி ஹெலிக்கொப்டர் விபத்தில் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து நடந்த கலவரத்தில் பலியானோரின் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளது.

சூடானில் கடந்த 20 ஆண்டுக்கும் மேலாக நிலவும் உள்நாட்டு கலவரத்திற்குத் தீர்வு கண்டவர் ஜோன் கராங். சூடான் வடக்கிலுள்ள மக்களுக்கும், தெற்கிலுள்ள மக்களுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தி துணை ஜனாதிபதியாக கடந்த மாதம் 9 ஆம் திகதி பதவியேற்றார். பதவியேற்ற ஒரு மாதத்திற்குள் ஹெலிகொப்டர் விபத்தில் பலியானார். இதில் ஜோன் கராங்கின் ஆதரவாளர்கள் ஆவேசம் அடைந்து கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பலியானோரின் எண்ணிக்கை தற்போது 100 ஆக உயர்ந்துள்ளது. முந்நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். சூடானில் தெற்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆவேசம் அடைந்து தலைநகர் கார்டூமை சூறையாடினர். கடைகளைத் தீ வைத்துக் கொளுத்தினர். கலவரத்தை அடக்க கவச வாகனங்களில் பாதுகாப்புப் படையினர் ரோந்துவருகின்றனர். எனினும் ஆங்காங்கே திடீர் திடீரென கலவரம் வெடித்தபடியுள்ளது. (ஒ)




## 'டிஸ்கவரி' தரையிறக்குவது பற்றி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை



வாஷிங்ரன்,ஓக.5

'நாஸா' விண்வெளி ஆய்வு கூடம் விண்ணுக்குஅனுப்பிய 'டிஸ்கவரி' விண் ஓடம் முழுமையாக திருத்தப்பட்டிருந்தபோதும் அதனை தரையிறக்குவது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

முதற்தடவையாக விண்வெளியில் வைத்தே விண் ஓடம் வெற்றிகரமாக திருத்தப்பட்டபோதிலும் அதனைத் தரையிறக்குவதில் பெரும் சவாலை எதிர்நோக்க வேண்டிவரும் என்று 'நாஸா' அய்வுக்கூட பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

குறிப்பாக விண்ஓடத்தின் வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் ஒடுகளுக்கிடையில் வைக்கப்பட்டுள்ள இழைகளை அகற்றும் பணிகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் - அதற்குப் பதிலாக புதிய ஓடுகள் பொருத்தப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்படுகிறது.

எனினும், இவ்வாறு திருத்தப்பட்டுள்ள விண்ஓடம், வளிமண்டலத்தை அடையும்போது எத்தகைய மாறுதல்களுக்குள்ளாகும் என்று ஆராய்ந்த பின்னரே அங்கிருந்து புவிக்கு தரையிறங்குவது குறித்து தீர்மானிக்கப்படும் என 'நாஸா' அறிவித்துள்ளது. (ஒ)

## அமெரிக்காவில் இரகசிய சிறை!

வாஷிங்ரன்,ஓக.5

அமெரிக்காவில் நிலத்தின் கீழுள்ள இரகசிய சிறையொன்றில் இரு யேமன் பிரஜைகள் எந்தவித விசாரணையுமின்றி 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள இரகசிய சிறைக்கூடம் பற்றிய விவரங்களை உடனடியாக வெளியிடுமாறு மனித உரிமை அமைப்பொன்று பாதிக்கப்பட்ட இரு நபர்களையும் வலியுறுத்தியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு குறித்து அமெரிக்கத் தரப்பிலிருந்து இதுவரை எந்தக் கருத்தும் வெளியிடப்படவில்லை. (க)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஓவ்செற் A-3 Davinsion மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 4591652 (38527)

இரண்டு மாதம் நிறைந்த கலப்பின அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.இராசேந்திரம், கே.கே.எஸ். றோட், கொக்குவில் சந்தி, யாழ்ப்பாணம். (38526)

## தவறிவிட்டது

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கிருஸ்ண தேவி என்பவரது அடையாளஅட்டை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 29A, சந்தன மாதா கோயில் ஒழுங்கை,சுண்டுக்குளி,யாழ்ப்பாணம். (38523)

## சிவபூமி பாடசாலை ஆண்டு நிறைவு விழா

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் முதலாவது ஆண்டு நிறைவு விழா கடந்த திங்கட்கிழமை சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கினார்.

அமெரிக்காவில் வசிக்கும் சிறுமிகள் அனுஷா, அஞ்சலி, ஆர்த்தி ஆகியோர் தாம் சேமித்த ஒரு தொகைப் பணத்தைப் பாடசாலைச் சிறுவர்களின் நலனுக்கென ஆறு.திருமுருகனிடம் நன்கொடையாக வழங்கினார்கள். பாடசாலை சிறுவர்களின் பான்ட் வாத்திய இசை மற்றும் கலை நிகழ்வுகள் ஆகியவையும் இடம்பெற்றது.(ஒ-111)

# கப்பல் கட்டும் தொழில்நுட்பப் பயிற்சி வகுப்பு

கண்ணாடிஇழை நாரினால் படகு மற்றும் கப்பல் கட்டும் தொழில்நுட்பப் பயிற்சிவகுப்புகள் தற்போது யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் நடைபெற்று வருகின்றன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜேர்மன் நிபுணர்களால் நடத்தப்படும் இப்பயிற்சிநெறியில் அடுத்த கட்ட பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது என யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி அதிபர் எம்.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறி வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்பும் ஆண், பெண் பயிற்சியாளர்கள் தமது விவரங்களை உடன் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (2226152) தொடர்புகொண்டு பதிவு செய்யலாம் என்றும் - ஐந்து நாள்கள் மட்டும் நடைபெறவுள்ள இப் பயிற்சிநெறி வகுப்புகளில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர் களுக்கு பயிற்சி நாள்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா நூறு வழங்கப்படும் என்றும் - மேலும் அவர் தெரிவித்தார். (எ-151)

## 1ஆவது அகவையில் மனமார வாழ்த்துகின்றோம்

05-08-2005

சி வ கா ந் த ன்



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசான் சைவப்புலவர் திரு.திருமதி கந்த.சத்தியதாசன் தம்பதிகளின் ஏக புத்திரன் சிவகாந்தன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (05-08-2005) வெள்ளிக்கிழமை புத்தூர் கிழக்கிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவர் சகல செல்வங்களும் பெற்று சீருஞ்சிறப்புடன் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சி.செல்வநேசன் குடும்பத்தினர்.
கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.

(சி/44417) (24-11-19)


# செயல்திறன் அரங்க இயக்கம்
**Active theatre Movement**

## நாடக மன்றங்களை வளப்படுத்தும் திட்டம்
## நாடக அரங்கக் களப்பயிற்சி

நாடக மன்றங்களை வளப்படுத்தும் நோக்குடன் நாடக மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்களுக்காக நாடகக் களப்பயிற்சி ஒன்றை செயல்திறன் அரங்க இயக்கம் கரவெட்டி பிரதேச செயலகத்துடன் இணைந்து ஓகஸ்ட் மாத இறுதியில் நடத்தவுள்ளது.

இப்பயிற்சியில் நாடக மன்ற உறுப்பினர்களும் மற்றும் நாடகத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் (ஆண், பெண் இருபாலாரும்) பங்குபற்றலாம்.

- பயிற்சி ஆரம்பம் :- ஓகஸ்ட் இறுதி வாரம்
- பயிற்சி நெறி விவரம் :-
  1. நடிகர்களுக்கான அடிப்படைப்பயிற்சிகள்
  2. நாடக எழுத்துருப் படைப்பாக்கம்.
  3. நாடக நெறியாள்கை

விண்ணப்ப முடிவுதிகதி – **15 .08.2005**

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி*

கலாச்சார உத்தியோகத்தர், பிரதேச செயலகம்,
கரவெட்டி, வடமராட்சி.

*அல்லது*

இயக்குநர் (சி-44416)(21-17-19)
செயல்திறன் அரங்க இயக்கம்,
"அருளகம்", ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

# இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா!

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபலபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் (Admission ) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.



**இ. பிரதீபன்**
**மானிப்பாய்.**

2003ஆம் ஆண்டு கணிதப்பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நான் கொழும்பு இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் ஆவேன். பல்கலைக்கழக அனுமதிக்கு எனது A/L பெறுபேறுகள் சற்றுப்போதாமல் இருந்தது. இந்நிலையில் கணனித்துறையில் எனக்கிருந்த ஆர்வம் கணனித்துறையில் ஓர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளவேண்டும் என்ற பேரவாவாக மாறியது. எனது ஆர்வத்திற்கு பெற்றோரும் பக்கபலமாக இருந்தனர். கொழும்பில் வசித்துவந்த நான் யாழ்ப்பாணத்தில் IIS நிறுவனம் சர்வதேச ரீதியில் பிரபல்யமான BTEC HND கற்கைநெறியினை நடாத்திவருவதாகக் கேள்வியுற்றேன். கொழும்புடன் ஒப்பிடும்பொழுது குறைந்த செலவில் இக்கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் கற்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதை அறிந்த எனது பெற்றோர் HND ஐத் தொடர அனுமதியளித்தனர். HND 4வது பிரிவில் பயின்றுவரும் நான் இறுதியாண்டுப் பட்டப் படிப்பினை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குரிய ஏற்பாட்டினையும் IIS நிறுவனமே எனக்கு செய்துதரவுள்ளது. என்போன்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறிய மாணவர்களுக்கு HND மிகச்சிறந்த ஒன்றாகும்.



**அ.அஜந்தா**
**யாழ்ப்பாணம்**

நான் தற்பொழுது IIS இல் HND 4வது பிரிவு மாணவி. வேம்படி மகளிர் கல்லூரியின் 2002 உயர்தர கணிதப்பிரிவு மாணவியாகிய நான் சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைத் தவறவிட்டேன். இந்நிலையில் யாது செய்வதென அறியாதிருந்த எனக்கு IIS நிறுவனம் ஓர் கலங்கரை விளக்குப்போல் காட்சியளித்தது. சர்வதேச தரம்மிக்க பிரித்தானிய சான்றிதழுக்கான Edexcel இன் BTEC HND கற்கைநெறியில் இணைந்து கொண்டதன் மூலம் எனது பெற்றோர் ஒளிமயமான என்னெதிர் காலத்திற்கு வித்திட்டுள்ளனர். எனது எதிர்காலம் தொடர்பான ஓர் தெளிவான நிலையில் தற்பொழுது நான் இருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. 1½ வருட இக்கற்கைநெறியை முடித்துக் கொண்டதும் எனது 3ம் ஆண்டுப் பட்டக்கல்வியை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளேன். இதன் மூலம் ஓர் மிகக்குறுகிய காலத்தில் கணனித்துறையில் பட்டதாரியாகும் வாய்ப்பினை IIS நிறுவனம் ஏற்படுத்தித் தந்தமையிட்டு நானும் எனது பெற்றோரும் மனநிறைவடைகின்றோம்.

## BTEC HND

**World Class Qualifications**

*Delivered Locally....... Recognised Globally*

**B.Sc ( Hons ) / BEng ( Hons )**
1 year at leading Universities in
UK, USA, Australia, Canada etc.

↑

**BTEC HND**
Computing / Software Engineering / Business
Information Technology ( 1 ½ years )

↑

**GCE A/L**
with 2 Subjects

**New Batch Starts on**
**17.08.2005 at 10.00 a.m.**

edexcel
INTERNATIONAL
Approved Training Centre

## IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் சுப்பிரமணியம் கோபாலபிள்ளை

எங்கள் குடும்பத் தலைவர் சிவபதமடைந்ததும் ஓடோடி வந்து ஆறுதல் கூறி சகல விதத்திலும் உதவிகளைச் செய்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அஞ்சல் மூலம் எமக்கு ஆறுதல் கூறிய உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டி 06.08.2005 சனிக்கிழமை காலை வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிரியைகள் எதிர்வரும் 08.08.2005 திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து இவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

57, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
T.P.: 077 6106770, 2527244

- பிள்ளைகள்.

(38529)(21-17)

# மரண அறிவித்தல்

## நடேசன் வசந்தகுமார்

(சுங்க இலாக உதவி அத்தியேட்சகர்-கொழும்பு)



கிருலப்பனையைப் பிறப்பிடமாகவும், 36/3, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், 9/11, காமஸ் அவனியு, கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் வசந்தகுமார் 03.08.2005 புதன்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசன் - வடிவாச்சி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற துரைசிங்கம் - மகேஸ்வரியின் மருமகனும் யோகேஸ்வரி (குமுதினி) யின் அன்புக் கணவரும் குமரதீபன் (வர்த்தகப்பிரிவு வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்), தீபகுமாரி, மயூரினி (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி சந்திரேஸ்வரி, புஷ்பராணி ஆகியோரின் சகோதரனும் சகுந்தலா தேவி, புனிதவதி, சோமசுந்தரம் (சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்- யாழ்.மாநகர சபை), தனபாலசிங்கம் (ஸ்ரீலங்கா ரெலிகொம்) , பாக்கியலக்ஷ்மி (மாலினி ஜேர்மனி), காலஞ்சென்ற இளமுருகனார் "மற்றும் சாந்தலிங்கம். (வர்த்தகர், பாண்டியந்தாழ்வு), ஆகியோரின் அன்பு மைத்துனரும் நவரத்தினம், பஞ்சலிங்கம், காயத்திரி, ராணிகிருஷ்ணகுமார் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2005) வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
து.சோமசுந்தரம் (யா/மாநகரசபை)
T.P.No. 021 -222 6117
து.தனபாலசிங்கம் (ரெலிகொம்)
T.P.No. 021- 222 2773,
0777 730565
(மைத்துனர்).

சேச் லேன்,
தாவடி,
கொக்குவில்.

(38525)(21.19.17)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# திருகோணமலையில் அரங்கேறுவது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்

*"திருகோணமலை நகரின் மத்தியில் சட்டவிரோதமாக - இரவோடு இரவாக - திடீரென முளைத்த புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றும்படி தமிழர்கள் கோரியதற்கு அவர்களுக்குப் பரிசு - வெகுமதி - திறந்த வெளிச் சிறைச்சாலை தானா?"*

- இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கின்றது திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் மற்றும் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், முப்படைத் தளபதிகள், மாவட்ட பொலீஸ் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் ஆகியோருக்கும் அனுப்பிவைத்த மகஜரிலேயே அது இப்படி விசனத்துடன் கேள்வி எழுப்பியிருக்கின்றது.

*தற்போது திருகோணமலை நகரம் முழுவதும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் தாங்கள் விரும்பிய இடங்களில் சாவடிகளை நிறுவி சோதனையில் ஈடுபடுகின்றனர். வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு இராணுவம் நிற்கின்றது. இதனால் மக்களின் அன்றாட நடவடிக்கைகளும், இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளன; வர்த்தகச் செயற்பாடுகள் சீரழிந்துள்ளன. மாணவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாதுள்ளனர்* - என்றெல்லாம் களநிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றது திருகோணமலைத் தமிழ்மக்கள் பேரவை.

இந்த நடவடிக்கைகள் மனித உரிமை மீறல்கள் என்பதுடன், புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முற்றிலும் மாறான செயற்பாடுகளுமாகும் என்றும் அது சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முன்னுரையே, *"இராணுவ நடவடிக்கைகளைக் குறைத்து, இயல்பு நிலையை ஏற்படுத்துவதே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம்"* என்பதைத் தெளிவுபடுத்தும்போது அதற்கு முரணான வகையில் திருகோணமலையில் அப்பட்டமாக - வெளிப்படையாக - இலங்கைப் படைகள் நடந்துகொள்கின்றன.

*"பகைமை நிலையை முடிவுக்குக் கொண்டுவந்து, சாதகமான சூழலை ஏற்படுத்துவது"* குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முன்னுரை பிரஸ்தாபிக்கின்றது. *"நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் விதத்தில் யுத்தநிறுத்தம் செய்வது"* பற்றியும் அந்த ஒப்பந்தம் கூறுகின்றது.

ஆனால், அரச படைகளோ கெடுபிடி நடவடிக்கைகளை அதிகரித்து, நெருக்கடிச் சூழலை ஏற்படுத்தி, பதற்றத்தை உருவாக்கி, அடக்குமுறையைத் திணித்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு உலைவைக்கும் கைங்கரியத்தில் ஈடுபடுகின்றன என்பதை திருகோணமலை மக்கள் பேரவையின் அறிக்கை அம்பலப்படுத்துகின்றது.

*"இயல்பு நிலையை மீளக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள்"* குறித்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாவது சரத்து தெளிவாகக் குறிப்பிடுகிறது. அதன் 2.5 பிரிவு இங்கு கவனத்தில் எடுக்கவேண்டிய அம்சமாகும்.

*"இரு தரப்பினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும், சோதனைச் சாவடிகள் நிறுவுவதையும் மீளாய்வு செய்து, குறிப்பாக மக்கள் அடர்த்தியாக வாழும் மாநகரங்களிலும், பட்டினங்களிலும் பொதுமக்களுக்குத் தொந்தரவு ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடனான முறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இந்த ஒழுங்குகள் யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து அறுபது நாள்களுக்குள் ஏற்படுத்தப்பட வேண்டும்."* - என்று ஒப்பந்தத்தின் அந்தச் சரத்துக் கூறுகிறது.

இங்கு ஒப்பந்தம் கைச்சாத்தாகி அறுபது நாள்களல்ல, மூன்றரை வருடங்கள் தாண்டிவிட்டன. ஆனால், இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக - பொதுமக்களுக்குத் தொந்தரவு ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடனான முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு மாற்றாக - கெடுபிடி நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன; நெருக்கடி அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அதுவும் மக்கள் அடர்த்தியாக வாழும் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் இது உச்சமட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கின் - பேரினவாதத்தின் - ஆக்கிரமிப்புக் குறியீடாக ஞானசீலரான கௌதம புத்தரின் சிலையை மாற்றி, அதை வைத்துக்கொண்டு தமிழர் மீது ஆக்கிரமிப்பைத் திணிக்கும் அவலம் இங்கு அரங்கேறுகிறது.

அயலானையும், அயல் இனத்தவனையும் நேசிக்கும் அறநெறியைப் போதித்த கௌதம புத்தரின் மாண்பு, இங்கு பௌத்தத்தின் பெயரால் மரணித்துப் போய்விட்டது. சமாதானத்தை வலியுறுத்திய அந்த மகானின் பெயரையும், அவரின் திருவுருவையும் சமாதான விரோதிகள் தமது ஆட்டத்துக்குப் பயன்படுத்துவது இலங்கைத் தீவின் துரதிர்ஷ்டம். சாந்தசொரூபியான புத்தபெருமானின் பெயரால் - சாத்வீகம் போதித்த அந்த உத்தம மகானின் வழிகாட்டலின் பெயரால் - ஹிம்சை நிகழுவது இந்த நாட்டின் விநோதம்.

அமைதியாக இருந்த திருகோணமலையை எந்நேரமும் வெடிக்கக் கூடிய எரிமலையாக மாற்றுவதற்கு அஹிம்சா மூர்த்தி புத்தரின் திருவுரு பயன்படுத்தப்படுவது பேரினவாதத்தின் நரித் தந்திரமாகும். அதற்கு அரசுத் தலைமையும் இடம்கொடுப்பது - அல்லது அதனைப் பின்நின்று இயக்குவது - மோசமான விளைவுகளையே தரும்.

மக்கள் பேரவை சுட்டிக்காட்டியபடி, தற்போதைய சமாதானச் சூழ்நிலை தொடர்ந்தும் பேணப்பட்டு, நீடிக்கப்பட வேண்டுமானால் திருகோணமலையில் குவிக்கப்பட்ட இராணுவம் மக்கள்குடியிருப்புப் பிரதேசங்களிலிருந்து விலக்கப்பட்டு முகாம்களுக்குள் முடக்கப்படவேண்டும். முறையற்ற விதத்தில் முளைவிட்ட புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்படவேண்டும். இவை செய்யப்படாவிட்டால் மீண்டும் திருமலையில் நிலைமை மோசமாவதைத் தவிர்க்கமுடியாமல் போகும்.

# பொலித்தீனால் சூழல் மாசடைவதைத் தடுக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்!

## தமிழீழ சுகாதார சேவையினர் கோரிக்கை

கிளிநொச்சி,ஓக.5

பொலித்தீனால் சூழல் மாசடைவதைத் தடுக்க அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இவ்வாறு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாகத் தமிழீழ சுகாதார சேவைகளின் நிர்வாகப் பொறுப்பாளர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மெல்லிய பொலித்தீன் பைகள் ஒப்பீட்டளவில் பெரும் எண்ணிக்கையில் பாவனையில் உள்ளன. இவை பல்வேறு வகைகளில் சூழலைப் பாதிக்கின்றன. இதற்குப் பொலித்தீன் பைகளின் நெகிழாத தன்மை காரணமாகின்றது. நவீன உலகம் இப்பிரச்சினைக்குத் தீர்வாக நெகிழ்த்தன்மையுடைய பொலித்தீன் உற்பத்தியையும், பாவனையையும் இனங்கண்டுள்ளது. சூழல் பாதுகாப்புத் தொடர்பில் அதிக கரிசனைகொண்ட தேசியத் தலைவரின் வழிகாட்டலில் முதன்முதலாக நெகிழ்த்தன்மை பொலித்தீன் பாவனை வடபகுதியில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்கான உற்பத்தி ஆலை எமது பகுதியிலேயே நிறுவப்பட்டுள்ளது.

நெகிழ்த்தன்மை பொலித்தீன் விசேட மூலப்பொருள்கள் சேர்க்கப்படுவதன் மூலம் வெப்பம், காற்று படுகின்றபோது நெகிழும் வகையில் ஆக்கப்படுகின்றது. இவ்வாறான நெகிழ்ச்சி அடைகின்ற வேளையிலேயே இதனுள் கலக்கப்பட்டிருக்கின்ற சிறு பதார்த்தங்கள் எறும்பு போன்றவற்றைக் கவர்ந்து அவை நெகிழ்வடைந்த இப்பொலித்தீன் பைகளை உட்கொள்ளவோ. துகழ்களாக பிரிகையடையச் செய்யவோ உதவுகின்றது. இதனால் இப்பொலித்தீன் பைகள் சூழலில் மூன்று மாத காலத்தினுள் பிரிகையடைந்து மண்ணில் கலந்துவிடுகின்றது.

அதேவேளை, பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் சாதாரணமாக எரியூட்டும்போது வெளியேறும் இரசாயனங்கள் மனிதனுக்குப் புற்றுநோயை ஏற்படுத்துவதுடன், நிலத்தின் கீழ் புதையுண்டு போகும் மேற்படி பொருள்கள் நிலத்தின் பௌதிகத் தன்மையைப் பாதித்து பிரதேசத்தின் விவசாயச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

இந்தநிலையில், வர்த்தகர்கள், பொது நிறுவனத்தினர் மக்கள் அனைவரும் பொலித்தீன் பாவனை தொடர்பான மேற்படி விடயங்களைப் புரிந்துகொண்டு பொலித்தீன் பொருள்கள் மற்றும் கழிவுப்பொருள்கள் சிதறி எறியப்படுவதைத் தவிர்ப்பதுடன் இந்த நடவடிக்கைக்குப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (ஒ)

# கிளிநொச்சி நகரில் கழிவகற்றலுக்கு நெகிழ் பொலித்தீன் பை விநியோகம்

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் கழிவகற்றும் பணிக்கு நெகிழ்த்தன்மையுடைய பொலித்தீன்பைகள் விநியோகிக்கப்படுகின்றன.

நெகிழாத்தன்மையுடைய பொலித்தீன் பாவனையால் சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க கழிவகற்றலுக்கு நெகிழ்தன்மையுடைய பொலித்தீன் பைகளைப் பயன்படுத்த தமிழீழ சுகாதாரச்சேவையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதன்படி, கிளிநொச்சி நகர்ப்பகுதி கழிவுகள், உக்கும் தன்மையுடைய தினசரி உணவு, பாவனைக் கழிவுகள், கரிய நிற நெகிழ்த்தன்மை பொலித்தீன் பைகளில் தினசரி சேகரிக்கப்படுகின்றன. பொலித்தீன் மன்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் வாரம் ஒரு தடவை அல்லது இரு வாரத்திற்கு ஒரு தடவை நீல நிற நெகிழ் தன்மைப் பொலித்தீன் பைகளில் சேகரித்து இறுதியகற்றவும் தொற்றும் தன்மையுள்ள கழிவுகள் (வைத்தியசாலைக் கழிவுகள்) மஞ்சள் நிற நெகிழ்த்தன்மை பொலித்தீன் பைகளில் சேகரித்து இறுதியகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பைகளைக் கரைச்சிப் பிரதேச சபையிலோ, தமிழீழ சுகாதார சேவை நடுவப் பணியகத்திலோ பெற்றுக்கொள்ளலாம் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# யாழ்.பதிவாளர் அலுவலகத்தின் பணிகள் பிரதேச செயலகங்களுக்கு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.பதிவாளர் பணிமனைப் பணிகள் இம்மாதம் முதல் நான்கு பிரதேச செயலகங்களுக்குப் பன்முகப்படுத்தப் படவிருக்கின்றன.

நாட்டில் செயலகங்களுடன் இணைந்து செயற்பட்டு வந்த பதிவாளர் பணிமனையின் பணிகளை பிரதேச செயலகங்களுக்குப் பன்முகப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இந்தச் செயற்பாடு தெற்கில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்பணி வடக்கில் நடைபெறவில்லை.

தற்சமயம் நிலவும் சமாதானச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்தப் பணிகளை பன்முகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்-

முதல்கட்டமாக கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழைஆகிய பிரதேச செயலகங்களுக்கு இம்மாதம் முதல் பணிகள் பன்முகப்படுத்தப்படவிருக்கின்றன என்றும் - யாழ்.மேலதிக மாவட்டப் பதிவாளர் பொ.ஈஸ்வரதாசன் தெரிவித்தார்.

அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் தமது பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களை அந்தந்தப் பிரதேச செயலகங்களிலேயே எதிர்காலத்தில் பெறவேண்டும் என்றும்-

சான்றிதழ்களில் திருத்தங்கள் செய்தல் உட்பட அது தொடர்பான பணிகளும் இனிமேல் அந்தந்தப் பிரதேச செயலகங்களிலேயே மேற்கொள்ள வேண்டும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.(ஒ-3)

# இலவச மருத்துவ முகாம்

வலி.தென்மேற்கு, ஓக.5

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் தியாகிகள் அறக்கொடை நிலையம் நடத்தும் இலவச மருத்துவ சேவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சில்லாலை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரசினர் போதனாவைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் இங்கு வைத்திய பரிசோதனை, சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இப்பகுதி மக்கள் இந்த இலவச வைத்தியசேவையைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-135)

# யாழ்.முற்றவெளி பஸ் நிலையம் குறித்த ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.முற்றவெளிப்பகுதியில் அமைக்கப்பட்டுவரும் தனியார் பஸ் நிலையம் குறித்த ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த பஸ் நிலையத்தின் அமைப்புப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. விரைவில் அதனைப் பாவனைக்குத் திறந்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதில் ஓர் அங்கமாகவே இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. யாழ்.செயலகக் கேட்போர்கூடத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இந்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் பஸ்களை நிறுத்துமிடம், கொழும்பு செல்லும் பயணிகளை இந்தத் தரிப்பிடத்தில் வைத்து ஏற்றுவது ஆகியவை உட்படக் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் குறித்து ஆராயப்படவுள்ளன. இதில் வீதிப் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த திணைக்களங்களின் பிரதிநிதிகள், யாழ்.பொலீஸ் அத்தியட்சகர், மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர், தனியார் பஸ் சேவை சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-13)

## உதயவாக்கு

நெருக்கடிகளுக்கிடையேதான் இறைவன் வெற்றிபெறுவதற்கான வழியையும் வகுத்துள்ளான்.

-ஹோம்ஸ்.

## நாளை

ஆடி 21
சனிக்கிழமை
06.08.2005
திதி: பிரதமை
முற்பகல் 11.07 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
காலை: 07.57 வரை
சுபநேரம்: 03.04 - 04.34
ராகுகாலம்: 09.04 - 10.34
(யாவும் பழைய நேரப்படி)



# தொழில்நுட்ப அலுவலர் பயிற்சித்தரத்துக்கு ஆள்சேர்ப்பு

கைதடி,ஓக5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித்தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக வடக்கு-கிழக்கு மாகாணத் திணைக்கள ஊழியர்களிடமிருந்து வடக்கு- கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ சாதாரணதரப்பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/ கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்த-

சம்பந்தப்பட்டதுறையில் பத்து வருட அனுபவத்துடன் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப தரங்களில் வகுப்பு Iதரம் II இல் குறைந்தது ஐந்து வருடச் சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தகுதியுடையோர் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை ''செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இல.35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-75)

## அறிமுகக்கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.இந்துக் கல்லூரியின் 'ஸ்கிறபிள்' கிளப் நடத்தும் 'ஸ்கிறபிள்' தொடர்பான அறிமுகக் கருத்தரங்கு எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து பாடசாலை அதிபர்கள், 'ஸ்கிறபிள்' பொறுப்பாசிரியர்கள், தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்பில் கற்கும் தலா 5 மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-202)

## மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்பனை

தென்மராட்சி,ஓக.5

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளையில் கடந்தவருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் அனைத்தும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த நகைகள் யாவும் எதிர்வரும் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என அதன் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

(எ-173)

## வங்கிச் சேவை விஸ்தரிப்பு

காரைநகர்,ஓக.5

காரைநகர் இலங்கை வங்கிக்கிளை தனது சேவையை விரிவுபடுத்த உள்ளதாக காரைநகர் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரம்முதல் விவசாயிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான கடன் திட்டங்களை அறிமுகப்படுத்த உள்ளதுடன், தங்க நகை அடைவு பிடிக்கும் சேவையும் நடைபெறவுள்ளதாகஅவர் மேலும் தெரிவித்தார். (எ-73)


**SUCCESS INSTITUTION**
CONDACT: 0776097438
E.mail - Success - jaff @ yahoo.com

| CIMA | CIMA |
|---|---|
| CERTIFICATE (FOUNDATION) LEVEL<br>All Five subjects | MANAGERIAL LEVEL<br>NOV - 2005 EXPRESS CLASSES<br>P1 - MAPE P7-FATP P8 -FA |

**Classes Commence on 14 th Aug.**
**For information: Please Condace 0776097438 and Vist**
**No.410, K.K.S Rd. Jaffna (IBMS)**
On 7 th Aug. at 9.am - 12.a.m
Note
- Registration with Cima Facilltated
- Those who already condacted Please reconform your registration

(38512) "success will be with you" (21-32-14-17)



2ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

லண்டனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட
திரு.திருமதி யோகதாசன் (சிறி) - சியாமளா (ஜெயா)
தம்பதிகளின் செல்வப் புதல்வி
செல்வி
திஷா
தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (05-08-2005) வெள்ளிக்கிழமை மானிப்பாயில் இருக்கும் அம்மப்பா இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை மருதடி விநாயகர் அருள்பெற்று சிறப்புடன் வாழ்கவென தாய், தந்தை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.
தகவல்: C.T.P. கா.நவரத்தினம் குடும்பத்தினர் (அம்மப்பா).
மெமோறியல் லேன், மானிப்பாய்.

HAPPY BIRTHDAY
(38517)(24-11-14)



மாதிரிப் பரீட்சையின் மகத்தான
பரிசில் நாள்
மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய தலைமை அலுவலகத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தினரால் 30-07-2005இல் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவித்து ஊக்குவிக்க நடைபெறும்
பரிசளிப்பு விழா - 2005
இடம் : யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
காலம் : 06-08-2005 சனிக்கிழமை
நேரம் : காலை 9 மணி
தலைவர்:
திரு.க.தனபாலசிங்கம் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)
பிரதம விருந்தினர்:
திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)
சிறப்பு விருந்தினர்:
திரு.மு.க.சிவபாதவிருதயர் அவர்கள்
(உதவிப் பொது முகாமையாளர், வடக்கு வலயம், மக்கள் வங்கி)
கௌரவ விருந்தினர்கள்:
திரு.க.ஆனந்தராசா அவர்கள்
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி)
திரு.து.இரகு அவர்கள்
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி)
திரு.பொன். அச்சுதம்பிள்ளை அவர்கள்
(முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை)
திரு.சி.மாதவகுமாரன் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி, வலிகாமம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர் சங்கம்,
சண்டிலிப்பாய் கோட்டம்.
(சி/44411)(24-32-14-17)
"மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி"




150 நாடுகளில் மிகப் பிர...ான சர்வதேச வாழும் கலை அற நிறு...ம் நடத்தும்.
இளைஞர் பயிற்சி
பயிற்சியின் மூலம் கிடைக்கும் பலன்கள்
தகுதி:- 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.
பயிற்சி நாள்கள்:-11.08.2005 முதல் 17.08.2005 வரை
பயிற்சி நேரம்:-காலை 7.30 முதல் 4.30 மணி வரை
பதிவு செய்யும் இடம்:-ஹலோக் வீதி, தேசிய சேமிப்பு வங்கி எதிரில், யாழ் வீதி, மானிப்பாய்
பதிவு செய்யும் நேரம்:-தினமும் காலை 9 முதல் மதியம் 2 மணி வரை.
இலவச மதிய உணவுடன்
மேலும் விவரங்களுக்கு:- 071 305 5923, 0777 250879, 077 9059549.
இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்




ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
ஆடிப்பூர விழா
காலம்: 07-08-2005 ஞாயிற்றுக்கிழமை
காலை: 7.00 மணிக்கு விசேட அபிசேகம்.
காலை: 10.00 மணிக்கு விசேட பூஜையாகித்தொடர்ந்து அம்பாளுக்கு விசேட ஆராத்தி நிகழ்வுகள் நடைபெறும்.
முற்பகல் - 11.00 மணிக்கு விசேட சொற்பொழிவு.
முற்பகல் - 11.30 மணிக்கு சுவாமி உலா வருதல்.
நண்பகல் - 12.00 மணிக்கு அன்னதானம்.
அடியார்கள் வருக! அன்னை அருள் பெறுக!!
ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் கோயில்,
ஏழாலை தெற்கு, ஏழாலை. (38497)(46-32-14-17) -தேவஸ்தானம்.



ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்
இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ ராமகிருஸ்ண சாஸ்திரிகள்
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்
கல்வி, வியாபாரம், திருமணப்பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது
அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,
இல.200, பலாலி றோட்; கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி).
யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373.




மதுரை மீனாட்சி அம்பாள்
அருள்வாக்கும் ஜோதிடமும்
K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி
இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். (காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை)
தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre) Back side.
T.P:- 776446525. (38376) (54-34-16-26)



Colombo Theological Seminary - Jaffna Center
கொழும்பு இறையியல் கல்லூரி - யாழ். நிலையம்
கிறிஸ்தவ ஊழியர் பயிற்சி நெறி
சபையும் இராஜ்ஜியமும்
(The Church and The Kingdom)
விரிவுரையாளர்: Bro.சுமந்திரன் (Bro.Sumandran)
திகதி: 08-12 ஓகஸ்ட் 2005 காலை 9.00 - 2.00 மணி வரை
இடம்: C.T.S. - Jaffna Center, 32/1, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்.நகர்
(தவிர்க்கமுடியாத காரணத்தினால் பாடம் மாற்றப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்) (38414)(26-32-14-17)



ஆத்மசாந்திப் பிரார்த்தனை

கந்தசாமி ஐயர் பால நடராஜஐயர்
இளையவனே இனியவனே பாலனே நடராஜனே!
இவ்வுலகை விட்டு அடுத்துலகுவிட்டு
இறைவுலகு சென்று ஆண்டொன்று!
பத்திரிகை துறைவிடுத்து பாதி வழியில்
அம்பிமகன் அம்பலத்தான் பற்றியதால்
பாவலரும் நாவலரும் கதாசரியரும் நாமும் நானிலத்தில்
நயன நீரால் அஞ்சலி செய்கின்றோம்.
"சாந்தி நிலவ வேண்டும்"
(சி/44412)(32-17-14) குடும்பத்தினர்

# வித்தியாசமான மத அனுபவம் சந்நிதி ஆலயத்தில் கிடைக்கும்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தையும், அது அமைந்துள்ள சூழலையும் மண்ணுலகில் இருந்தாலும் விண்ணுலகிற்கு ஒப்பான புனிதமான புண்ணிய பூமியாகவே ஞானிகள் பலரும் கருதுகின்றனர். யோகர் சுவாமிகள் ஒரு முறை இவ்வாலயத்தைத் தரிசிக்க வந்தபொழுது 'பார்க்கும் இடம் எல்லாம் இங்கே சிவலிங்கங்கள் காட்சியளிக்கின்றனவே!' எனது பாதங்களை நிலத்தில் எவ்வாறு பதிப்பேன் என அவரது உள்ளம் ஆதங்கப்பட்டதை எம்மால் அறிய முடிகிறது.

**சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. ஆலயத்தின் வரலாற்றுப் பெருமை, அற்புதங்கள் குறித்து விவரிக்கிறார் கட்டுரையாளர்.**

இவ்வாறு ஞானிகளாலும், யோகிகளாலும் உணரப்பட்டது மட்டுமன்றி உலகியல் வாழ்வில் ஈடுபட்டுள்ள சாதாரணமான மக்களது வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்வதாலும் இவ்வாலயம் சிறப்புப்பெற்று விளங்குகின்றது. அதாவது உலகியல் வாழ்வில் மக்கள் எதிர்நோக்குகின்ற உடல் துன்பம், உளத்துன்பம் உட்பட எல்லாவிதமான துன்பங்களையும் அவர்கள் மீது கொண்ட கருணையினால் சந்நிதி முருகன் போக்குகின்ற அதே வேளை - உலகியல் வாழ்வில் தம்மை மேம்படுத்துவதற்காக மக்கள் வேண்டுகின்ற செல்வங்கள் அனைத்தையும் வழங்குகின்ற ஒரு விந்தையை சந்நிதி முருகன் நிகழ்த்திக்கொண்டிருப்பதுதான் இவ்வாலயத்தின் சிறப்பு மிக்க தனித்துவமாக உள்ளது. இத்தகைய தனித்துவமான சிறப்பிற்குரிய ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகப் பெருமானது வீருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மிகவும் சிறப்பாக இடம்பெறுகின்றது.

**கொடியேற்றத்தின் சிறப்பு**

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் கொடி ஏற்றத்திருவிழா என்பது ஆகமவிதிக்கு உட்படாது. கொடித்தம்பம் இல்லாது இடம்பெறும் திருவிழாவாக இருந்த பொழுதிலும் ஆன்மாக்கள் எல்லோரையும் ஒன்றிணைக்கும் உன்னதமான ஓர் உற்சவமாக மேற்கொள்ளப்படுகிறது. முக்கியமாக சமயப்பெரியோர்கள் எதிர்பார்க்கின்ற உண்மையான இறைவழிபாட்டினை - உண்மையான பக்திநிலையை - உண்மையான பண்பாட்டினை மக்கள் வெளிப்படுத்தி நிற்கின்ற காட்சிகளை எல்லாம் ஒருங்கே காணுகின்ற சிறப்பும் இங்கே இடம்பெறுகின்றமை அனைவருக்கும் மகிழ்வைத் தரும்விடயமாகும்.

அதுமட்டுமல்ல பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்தக் கொடி ஏற்றத்திருவிழாவில் பங்கு கொள்ளுவதுடன் அவர்கள் அனைவரும் அகத்திலும் புறத்திலும் உண்மையான பக்தியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் காட்சி ஒவ்வொருவரது மனதிற்கும் சாந்தியை ஏற்படுத்தி அவர்களைத் தூய்மைப் படுத்துவதாக அமைந்திருக்கும்.

அதுமட்டுமன்றி சமயம் அல்லது ஆலயம் என்னென்ன நல்ல சமூகப் பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்று சமூகவியல் அறிஞர்கள் எதிர்பார்க்கின்றார்களோ அத்தகைய சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம், பரந்த சிந்தனை, வேற்றுமையில் ஒற்றுமைகாணும் இயல்பு போன்ற நல்ல பண்புகளை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் கொயேற்றத் திருவிழாவிலும் தொடர்ந்துவரும் திருவிழாக்களிலும் காணமுடியும். இங்கே வழிபட வருகின்ற ஒவ்வொரு அடியவர்களும் தமது உள்ளுணர்வால் சந்நிதியானுடன் இரண்டறக்கலந்து உண்மையான பக்தியை மேற்கொள்வதனால் இவ்விதமான நல்ல சமூகப்பண்புகள் இவ்வாலயத்தில் இயல்பாகவே காணப்படுகின்றன.

கலியுகம் என்பது துன்பங்கள் நிறைந்த ஒரு யுகமாகக் கொள்ளப் படுகிறது. ஆனாலும், இந்தத் துன்பங்கள் நிறைந்த கலியுகத்தில் மக்கள் பக்தி மார்க்கத்தின் மூலம் முருகப்பெருமானை வழிபாடு செய்து இலகுவாக தமது துன்பங்களைப் போக்கமுடியும் என்பதைப் பொதுவாக அடியார்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். ஆனாலும், ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகனது ஆலயத்தில் தினமும் அடியார்கள் கூட்டம் அலை மோதுவதற்கு விசேடமான சில காரணங்கள் இருக்கின்றன என்பதையும் நாம் சிறிது ஆழமாகச் சிந்திக்க வேண்டும். பொதுவாக ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் அமைந்துள்ள அமைவிடச் சிறப்பும் சந்நிதி முருகனது தனித்துவமான திருவருளுமே இதற்கான காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்த ஆலயத்துடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருக்கின்ற உண்மையான அடியவர்கள் மேற்கூறிய அம்சங்களின் உண்மைத்தன்மையை நன்கு உணர்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**மனித நிலைப்பட்ட வழிபாடு**

இங்கே ஆகமவிதிக்கு உட்பட்ட சமயச்சடங்குகளோ அல்லது தேவார திருவாசகங்களோ கூடக் கடைப் பிடிக்காது; அவற்றினைப் பின்பற்றாது சந்நிதி முருகனிடத்தில் ஒவ்வொரு அடியவர்களும் தங்களை நேரடியாகவே ஈடுபடுத்தி அவனது அருளைத்தாமாகவே பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வித்தியாசமான மத அனுபவத்தை அடியார்கள் பெற்றுக் கொள்ளமுடியும் என பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறிய கருத்தை நாம் இவ்விடத்தில் மனம் கொள்வது பொருத்தமானது. இதனை மேலும் எளிமையாகக் கூறுவதானால் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகப் பெருமானை மனித நிலைப்படுத்தி அந்த மனித நிலைப்படுத்தப்பட்ட உறவின் மூலம் சந்நிதி முருகனிடம் ஒவ்வொரு அடியார்களும் தமது தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது மட்டுமல்ல தமது தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் தனிச்சிறப்பும் இவ்வாலயத்தில் காணப்படுகிறது.


அதிலும் வெவ்வேறு குலத் தொழிலைச் செய்கின்றவர்கள், வெவ்வேறு சமூகப்பின்னணியிலிருந்து வருகின்றவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் உணர்வலைகள் மற்றும் சொற்பதங்களைப் பயன்படுத்தி சந்நிதி முருகனிடம் பக்தி செலுத்தி வாய்விட்டு அவனுடன் நேரடியாக உரையாடி அவனது அருளை உரிமையுடன் பெற்றுக்கொள்வது என்பது ஒவ்வொரு மனிதனது உள்ளங்களையும் பரவசமாக்கும் ஒரு விடயமாகும்.

இவ்வாறு பாமரமக்களும், சமூகத்தில் மிகவும் கீழ்மட்ட மக்களும் பெருமளவு ஒன்றுகூடி வழிபட்டதனால் சில சமூகப்பிரிவினர் இவ்வாலயத்தின் மகிமையை உணராது இது கீழ்மட்ட மக்களுக்குரிய ஆலயம் என்று கருதியதாகவும் அறிய முடிகிறது. ஆனால், சந்நிதியானுடைய திருவருளையும் அங்கே நடைபெறும் அற்புதங்களையும் நன்கு உணர்ந்துகொண்டதனால் இன்று எந்த வேறுபாடுகளும் இன்றி அனைத்து மக்களும் அவனது திருப்பாதங்களை வழிபட்டு அவனது திருவருளைப் பெறுவதற்காக அங்கே ஒன்றுகூடுகின்ற காட்சி அனைவருக்கும் பரவசத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. அதுமட்டுமல்ல, சில வேற்றுமதத் தலைவர்கள் கூட சந்நிதியானுடைய திருவருளின் சிறப்பை உணர்ந்தவர்களாய் மதம் மாறிய நிலையிலும் அவனை உள்ளத்தில் நிறுத்தி அவனது அடியார்களாகத் தொடர்ந்தும் வாழ்ந்துகொண்டிருப்பதை அவர்கள் மூலமே அறிய முடிந்ததும் இங்கே குறிப்பிடத் தக்க விடயமாகும்.

ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகப் பெருமானது ஆலயம் தொடர்பான சிறப்புகளை நாம் மேலும் விளங்கிக்கொள்வதற்கு இவ்வாலயம் தொடர்பான புராதன வரலாற்று நிகழ்ச்சியை விளங்கிக்கொள்வதும் அவசியமானது.

**தலவிருட்சம்**

முருகப்பெருமான், தேவர்கள் முதலியோர் புடைசூழ வானத்தின் மீது சென்றுகொண்டிருக்கும் பொழுது நேரம் சாயங்காலம் ஆகிவிட்டதால் தேவர்களுடைய விருப்பப்படி முருகப் பெருமானுக்குரிய சாயரட்சப் பூசையைத் தேவர்கள் பக்திபூர்வமாகத் தற்பொழுது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்துள்ள பகுதியில் நிறைவேற்றியுள்ளனர். இவ்வாறு தொண்டை மானாற்றங்கரையில் தேவர்கள் முருகப்பெருமான் மீது மேற்கொண்ட சாயரட்சைப் பூசையின் நிமித்தம் மகிழ்ச்சியடைந்த எம்பெருமான் இவ்விடத்தில் எக்காலமும் தனது திருவருட்சக்தி நிலைத்திருக்கும் என்று வெளிப்படுத்தியுள்ளார்கள். இதனைத் தனது ஞான சக்தியால் உணர்ந்த ஐராவசு என்ற முனிவர் இவ்விடத்தில் தவம்செய்து முத்தியடைந்துள்ளார். அவ்வாறு அவர் முத்திபெற்று அவ்விடத்திலேயே சமாதியடைந்துள்ளதாகவும் அறியப்படுகிறது.



**ந. அரியரட்ணம்.**
(அதிபர்).

(15 ஆம் பக்கம் பார்க்க)

---

சந்நிதி ஆலயத் திருவிழாக் காலத்தில்

## சைவ கலை பண்பாட்டுப் பேரவை விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

வடமராட்சி,ஓக.5

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயில் பெருந்திருவிழா காலத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் விசேட பஜனை, சொற்பொழிவுகளை நடத்தவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத் தினத்தன்று முற்பகல் 10 மணியளவில் வடபிராந்திய சாயி சமித்தியினரின் பஜனையும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் கந்தபுராணக் கலாச்சாரம் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆங்கில விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தியின் மீளா அடிமை எனும் தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறும்.

பெருந்திருவிழாக் காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதானம் நண்பகல் 12 மணி தொடக்கம் நடைபெறும் என ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதசுரபி செ.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.(ஒ-173)

---

## மலையக மக்களின் வாக்குகளை கவர்வதில் பிரதமர் அதிக ஆர்வம்

மலையக மக்கள் முன்னணியுடன் பேச்சு

கொழும்பு ஓக.5

ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்குப் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றார். மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் இதற்கு உதவ முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெருந்தோட்டச் சிறுகைத் தொழில்கள் மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் சி.பி.ரத்நாயக்க மூலம் மலையகத் தமிழர் வாக்குகளைக் கவரப் பல்வேறு வேலைத் திட்டங்களைப் பிரதமர் முன்வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மலையகத்தில் மாற்றுத் தலைமை என எதிர்பார்க்கப்பட்ட சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியின் சில முக்கிய உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேரடியாகச் சந்தித்து இந்த விடயம் பற்றிப் பேசியுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின்பேரில் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் அவரைச் சந்தித்துள்ளனர். அமைச்சர் சி.பி.ரத்னாயக்கவும் உடனிருந்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது மலையகத்தில் அத்தியாவசியமாகவும் அவசரமாகவும் மேற்கொள்ளப் பட வேண்டிய பல வேலைத்திட்டங்களை மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் பிரதமரிடம் முன்வைத்தனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (ஐ-க)

---

## வீடமைப்புக்கான 2ஆம் கட்ட கொடுப்பனவு இவ்வாரத்தில்

பிரதித் திட்டப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.5

உலக வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட ஆயிரம் பயனாளிகளுக்கான 2ஆம் கட்டக் கொடுப்பனவை இந்த வாரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

சங்கானை, காரைநகர், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், நெடுந்தீவு, தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 2ஆம் கட்டக் கொடுப்பனவான60 ஆயிரம் ரூபா இந்தவாரத்தில் வழங்கப்படும்.

ஏனைய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கும் விரைவில் 2ஆம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படும்.

முதலாம் கட்டக் கொடுப்பனவான 50 ஆயிரம் ரூபா சகல பிரதேச செயலங்களையும் சேர்ந்த பயனாளிக்கு வழங்கி முடிக்கப் பட்டுவிட்டது என்று பிரதித்திட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(எ-202-204)

---

## சாவகச்சேரி நகர்ப்பகுதிக்கான நீர் விநியோகம் பரீட்சார்த்தம்

தென்மராட்சி, ஓக.5

சாவகச்சேரி நகர்ப்பகுதிக்கான குடிதண்ணீர் விநியோக பரீட் சார்த்தப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்தவாரம் குடிதண்ணீர் விநியோகத்திற்கான ஆயத்த வேலை கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், சில இடங்களில் விநியோகக் குழாய் கள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் அவற்றைப் புனரமைக்கும் பணி நடைபெற்று வருவதாகவும் - விரைவில் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர்ப் பகுதி குடிதண்ணீர் விநியோகத்திற்கென 'நீர்ப்' நிறுவனத்தினரால் 35 ஆயிரம் லீற்றர் கொள்வனவு கொண்ட நீரித் தாங்கி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

---

## அ.அட்டைகள் விநியோகம்

தென்மராட்சி, ஓக.5

தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஊடாகத் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் ஒரு தொகுதியினரின் அடையாள அட்டைகள் பிரதேச செயலகத் திற்கு வந்துள்ளன.

இவை அந்தந்த கிராம அலுவலர் மூலம் உரியவர்களுக்கு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

# SAAMSTECH

## ஆசிரியர், கணினி மற்றும் நிர்வாகப் பணியாளர்களுக்கான பயிற்சிநெறி மூலமான நியமனம் மற்றும் மேலதிக வெற்றிட விபரங்கள்

### கணினி கற்கைநெறி முகாமையாளர்கள்

**Type of Work :**

Online Course Development, Online Course Handling, Site Administration, Internal Course coordination, Related Work

1. Photo shop - ( L.Tharjini, A.Nagenthini)
2. Corel draw - (P. Sasivathani, S.piratheepan)
3. Page maker - (J. Senthilak, A.Thiruveni)
4. Author ware - 2 மேலதிக வெற்றிடம்
5. Flash & Fire works (J.Rosanth , k. Chanthiramohan)
6. Maya , 3 Dmax & Director ( S. Arumairasa ), 1 மேலதிக வெற்றிடம்
7. VB - (B. Neru, S .Keerthiga, V .Niruthika ) 2 மேலதிக வெற்றிடம்
8. Php+,Mysql - 4 மேலதிக வெற்றிடம்
9. Java script & Vb Script - 2 வெற்றிடம்
10. Java - ( B.Jeyarani )
11. C, C++, C sharp - ( S.Surekka )
12. Oracle - 1 மேலதிக வெற்றிடம்
13. Html ,Css, Web, Internet fundamental ( S. Jalini ) 1 மேலதிக வெற்றிடம்
14. Ms Office & Front page - 1 மேலதிக வெற்றிடம் (K. Anusha, S.Yogamalar, A.Aliximala )
15. Hard ware - 1 மேலதிக வெற்றிடம் ( Ajanthan, Ajantha )
16. ASP - 2 மேலதிக வெற்றிடம்
17. Dream weaver - 1 வெற்றிடம் S.Winson)
18. Linux - 1 வெற்றிடம் ( S. Sutharsan)

### மொழிக் கற்கைநெறி முகாமையாளர்கள்

**Type of Work :**

Language Research, Development, Online Course Development, Online Course Handling, Site Administration, Internal Course Coordination, Subject Related Work.

1. Sinhala - 1 மேலதிக வெற்றிடம் (S. Ithayaranjini , M. Piragash )
2. German - 1 மேலதிக வெற்றிடம்
3. French - 1 vacancy ( K. Anushan )

### ஆங்கில மொழிக்கான கற்கைநெறி முகாமையாளர்கள் மற்றும் பயிற்சியாளர்

**Type of Work :**

Language Research, Development, Online Course Development, Online Course Handling, Site Administration, Internal Course Administration, Internal Course Coordination, Internal Teaching, External & Postal Course Handling, Subject Related Work

(S.Janani, V.Tharshini, S.Sukirtha, S.Kajatheepan, S.Manjutha, S.Sukirtha (1st batch), G.Aya, K.Anitha, N.Thadchajini,N. Piragash )

### Activity Development (தமிழ்)

**1. Children Application Development**

**Type of Work :** Developing Computer Applications and packages for Children Learning activities(Vocabulary, Arichuvadi, Facts, Quotations, Stories, Countries, English. Computing, Activities, ...) ( judita chiristin, G.Tharmini,S.Sivajini, T. Jamila ) 1 வெற்றிடம்

**2. Knowledge Pack** - (P. Mayuram ) 1 மேலதிக வெற்றிடம்

**3. Quiz Portal** - 4 வெற்றிடம் (Velsutha)

### தமிழ் மின்னல்

**Book**

( S.Subahini, S. Jeyaroobavel, S. Kamshini, E.Lumin conseka )

**Web** - ( S.Selvathas )

### Jaffna Directory

**Directory** - 2 மேலதிக வெற்றிடம்

**Web**-(Jaffnadirectory.com, petttah.com, atlanka.com) (K .Archana )

### பொது நிர்வாகம் Admin

K. Pirakashini, A. Mithula, V. Elina, S.Malinie, S.Kokulan, I. Vickneswaran (3rd batch))

### Accounts

(V. Ratheeswaran, P.Vishnusri, B.Ganachelvan)

### Dept of Computing

(R.Olanda, K.Sooriyakumary, R.Jeyalatha, S.Vijayabarathy, S.Nilaolimalar, P.Nilani, N.Sinthuja, S.Yogeswary, K.Sulaksana, T.Thanuja, K.Tharsini, E.A.Kanchana, A.Sujatha, P.Rohini, S. Logeswaran, T.Thusyanthy, T.Barathithasan, B.Sukirtha, B.Balasukirtha, T.Pirabashini, K.Ratnapirapa, S.Jesintha, S.Pratheepa, S.Rajamani, P.Vijitha, N.Siyamaladevi, Anton Amalaraj, R. Ramesh kumaran)

### Core - Group (WEB)

**Type of Work :** Web administration, Designing, Development & Hosting - (J Umasuthan)

### Core - Group (Multimedia)

**Type of Work :** Multi media - Administration, Designing, Development - 5 Vacancies (P. Rajeethan)

### (Customer Care)

**Type of Work :** Information Handling ( V.Thanusja, M.Suganthy, J. Umasuthan )

### Online Marketing

**Type of Work :** Administration, Co-ordination of online Marketing, Research and Development. ( V.Kavitha, T.Rajeev)

### Dept of English

**Certification Portal** (certcore.com) 10 Vacancies ( T.Thamilini, B.Kasthuri, S.Jeyanathan, V.Venugobalan)

**Children Activity development** 5 Vacancies ( S.Sivathasan, G.Ajantha,G. Pirasanth, W.E.Nivoshala, F.Jeyachelvan)

**Quiz portal** (corequiz.com) - 10 Vacancies (SJeyapriya, S.Kokilatharan, T.Aswini, S.Subajini, S.Rajaram, W.Mary Romany)

### Web Administration

**Type of Work :** Administration, Content Development, Co-ordination, Updation.

1. Tamiltutor.com - 1 மேலதிக வெற்றிடம்
2. aavanam.com, nulakam.com - Designing development & e-book application, Online book publication. ( S.Vinotha)
3. kaditham.com -( S.Vickneswaran "1st batch")
4. sinthu.com - (S.Priyanthi)
5. Tamil box. com - Tamil entertainment potal 1 மேலதிக வெற்றிடம்
6. Nowlanka.com, Abclanka.com, Dodlanka 1 மேலதிக வெற்றிடம்
7. Thakaval.com - P.Satgunarajan, T.Selvaluxmy
8. GCEOL.COM - ( K.Jeyaseelan "1st batch ")
9. GCEAL.COM-1 Vacancy ( S.Sanmukathashan, L. Thayananthi)
10. Eelamhealth.com -1 வெற்றிடம்( A.Thevaki)
11. Tamilworldwide.com - 1 மேலதிக வெற்றிடம்
12. Kaalai.com - 1 மேலதிக வெற்றிடம்
13. Cheithi.com - 1 மேலதிக வெற்றிடம்
14. Kurali.com - 1 மேலதிக வெற்றிடம்
15. Thalir.com - 1 வெற்றிடம் (S. Rajitha)
16. tamilneri.com - 1 ( R.Thadchajini)
17. Tamilcomputer - 1 Vacancy (S.Banukaran)

### Administration (District Offices)

யாழ்ப்பாணம்(50), கொழும்பு (40) மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களில் (40) பணிபுரிய 125 இற்கு மேற்பட்டோர்க்கு வெற்றிடம் உண்டு. அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது. கணினி தேர்ச்சி உடையோர் க.பொ.த உயர்தரத்தில் 2 பாட சித்தியுடனும் தெரிவுசெய்யப்படுவர்

## SAAMSTECH இன் ஆங்கில, கணினி மற்றும் அலுவலகவியல் தொடர்பான மேலதிக வெற்றிடங்களுக்கான

# பயிற்சியும் பணிநியமனமும்

இன்றைய உலகமயமாதலில் நமக்குக் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி, நவீன தொழில் நுட்ப செயற்பாடுகளில் எமக்குள்ள இடர்பாடுகளை நீக்கி, நவீன கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் காலடி எடுத்து வைப்பதற்கான சந்தர்ப்பம்.

**கல்வித்தகுதி** : பட்டம் அல்லது க.பொ.த உயர் தரத்தில் சித்தி ( இவ்வருடம் பரீட்சை எழுதி 3 பாடங்களிலும் சித்தியடையக்கூடியோரும் விண்ணப்பிக்கலாம், ஆங்கிலப் பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை. கணினி அறிவு விரும்பத்தக்கது.

**பயிற்சிக்காலம்** : 3 மாதங்கள். ( தினமும் 4 மணிநேரம்) வாரத்தில் 5 நாட்கள்

**கட்டணம்** : **12,000/-**

3 மாதகாலப் பயிற்சியின்போது முழுமையான ஆங்கிலம் கற்பிக்கப்படுவதோடு நியமிக்கப்படும் துறைகளில் முழுமையான பயிற்சியும் வழங்கப்படும். அத்துடன் நியமிக்கப்படும் பணி சாரா துறைகளிலான பயிற்சியில் அவர்கள் எமது நிறுவனத்தில் இலவசமாக பயிற்சி பெறுவதற்கான ஊக்குவிப்பும் வழங்கப்படுகிறது.

**மாவட்ட அலுவலகங்களுக்காக தெரிவுசெய்யப்படுவோர் பயிற்சி நெறியின் முடிவில் அந்தந்த மாவட்டங்களிலேயே பணிநியமிக்கப்படுவர்.**

**குறிப்பு** : தகுதி மற்றும் வரவு அடிப்படையில் பயிற்சிக்கு 40 பேர் மட்டுமே தெரிவு செய்யப்படுவதால் நேரில் வரவும்.

# SAAMSTECH

**841, Hospital Road, Jaffna. 198, Galle Road, Dehiwala. 077- 3068968**

## ஆங்கில நேரடிவகுப்பு

இலங்கையின் வரலாற்றில் ஆங்கில வகுப்புக்கள் வருடக்கணக்கான ஒரு கற்கைநெறி என்ற நிலையினை மாற்றி சில நாட்களிலேயே ஆங்கிலத்தினை கதைப்பதற்கான அடித்தளத்தினை உருவாக்கும் ஆங்கில நேரடி வகுப்பு.

3 மாத பாடநெறியின் ஒவ்வொரு வகுப்பிலும் அடித்தளம், அன்றாட சொல்வள விருத்தியாக்கம், கதைத்தலுக்கான பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிகள்.

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 முதல் மாலை 7.00 வரை ஒவ்வொரு 2 மணிநேரமும் வகுப்புக்கள

அரச தனியார் ஆசிரியர்கள், அலுவலர்களுக்கான வகுப்புக்கள் தினமும் மாலை 6.00 முதல் 7.00 வரை

**கட்டணம் : ரூபா 8000/-**

**அடுத்த இரண்டு நாட்களுக்கு சலுகைக்கட்டணம் ரூ.3000/=**

பாடநெறியின் ஆரம்பத்தில் ரூபா 1000 இற்கான புத்தகங்களும் முடிவில் ரூபா 2000 இற்கான புத்தகங்கள் மற்றும் **CD**உம் இலவசம்.

**இம்மாதம் முதல் மாதாந்த பரீட்சையில் அதி உயர் புள்ளி பெறும் மாணவருக்க ஒரு Computer இலவசம்**

**SAAMSTECH**
**841, Hospital Road,**
**Jaffna.**

## அறிவித்தல்

இவ்வருடத்திற்கான SAAMSTECH இன் தேசிய ஆங்கில டிப்ளோமா பரீட்சை வரும் October 29 இலங்கை முழுவதிலும் நடைபெறும்.

## தேசிய ஆங்கில டிப்ளோமா இலவச தொலைக்கல்வி பாடநெறி

ஆங்கிலத்திற்கான சூழலினை ஏற்படுத்தும் பொருட்டு இவ்வருடம் 3 இலட்சம் பேருக்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள 60 அலகுகள் மற்றும் 5 நேரடி வகுப்புகள் கொண்ட இத்தொலைக்கல்வி பாடநெறிக்கான அனுமதி முதல் சான்றிதழ் வரை முற்றிலும் இலவசம். 10 வயதுக்கு மேற்பட்ட யாரும் கலந்துகொள்ளலாம்.

ஆங்கிலம் கதைப்பதற்கான புதிய முறைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இப்பாடநெறிக்கு புதிதாக விண்ணப்பிக்க விரும்புவோர் சுய முகவரியிட்டு ரூபா 5/- இற்கான முத்திரையொட்டிய மூன்று நீள தபாலுறைகளை அனுப்பி சேரலாம். பாடநெறியில் கலந்துகொள்வோர் அலகுகளில் தரப்படும் பயிற்சிகளை பூர்த்தி செய்வதோடு இலவச வகுப்புகளில் கலந்துகொள்வதன் மூலமே அடுத்த அலகுகளை இலவசமாக பெற முடியும்.

புதிதாக சேர்வோர் அனுப்பவேண்டிய முகவரி

**SAAMSTECH,**
**841, Hospital Road,**
**Jaffna**

## SAAMSTECH இன் KNOWLEDGE PACK

உங்கள் வீட்டுக்கணினிகளை முழுமையான பயன்பாட்டுக்கு பயன்படுத்த இது ஒரு சந்தர்ப்பம்

- ❑ தமிழ் மூலமான கணினிக்கற்கைநெறிகள்
- ❑ தமிழ் மூலமான ஆங்கில, சிங்கள, ஜெர்மன் மொழி
- ❑ க.பொ.த சா.த மற்றும் உயர்தர வகுப்பிற்கான ஆயிரக்கணக்கான கேள்விபதில் மற்றும் பாடநெறி
- ❑ ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பாடநெறி மற்றும் பயிற்சிகள்
- ❑ SLAS உட்பட அனைத்து தரப்பினருக்குமான பொது உளச்சார்பு பயிற்சிகளும் விளக்கங்களும்
- ❑ 3 வயது முதல் 19 வயதினருக்கான செயற்பாடுகள்
- ❑ பொது அறிவு, நகைச்சுவை மற்றும் துணுக்குகள்.

**அனைத்தும் ஒரே பொக்கிசமாக......**

அறிமுக விலை

**ரூபா 15,000/- மட்டும்**

**SAAMSTECH, 841, Hospital Rd, Jaffna**

# வவுனியா வடக்குப் பிரதேசத்தில் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள்

ஒட்டுசுட்டான்,ஓக.5

இராணுவ ஆக்கிரமிப்பால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வவுனியா வடக்குப் பிரதேசத்தில் தமது அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்யமுடியாத நிலையிலுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டச் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது.

வவுனியா மாவட்டத்திலுள்ள புளியங்குளம் வடக்கில் பழைய தென்றல் ஓய்வகமும் கீரிசுட்டான், கற்குளம் பகுதியில் பொது நோக்கு மண்டபமும் சின்னடம்பன் விஞ்ஞானகுளம் பகுதியில் சிவன் முன்பள்ளியும் தெகிழ்படந்தான் தேவன்மடு வீதியில் உள்ள குளவிசுட்டானில் பொதுநோக்கு மண்டபமும் அமைக்கப்படவிருக்கின்றன.

டென்மார்க் அகதிகள் பேரவை நிறுவன நிதியுதவியுடன் நெடுங்கேணி அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் இந்தக் கிராமங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

இந்தத் திட்டங்களின் முதற்கட்டமாக இடம்பெற்ற மக்கள் பங்கேற்புடனான கிராம மதிப்பீட்டில் டென்மார்க் அகதிகள் பேரவையைச் சேர்ந்த கிராமப் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், பிரதேசப் பிரதிநிதிகள், கிராமசேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு வேலைத் திட்டங்களை இனங்கண்டு உறுதிப்படுத்தினர். (த-341)

## சாரணர் பயிற்சி வகுப்பு

வட்டக்கச்சி, ஓக.5

கிளிநொச்சி வலய பாடசாலைகளில் உள்ள சாரணர்குழுப் பொறுப்பாசிரியர்களுக்கான இருநாள் பயிற்சிவகுப்பு ஒன்று வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம், [illegible] ஆம் திகதிகளில் வதிவிடப் பயிற்சிநெறியாக நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஓர் ஆண் ஆசிரியரையும், ஒரு பெண் ஆசிரியரையும் கலந்துகொள்ளச்செய்யுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கிளிநொச்சி வலயப் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் உள்ள சாரணர்குழுப் பொறுப்பாசிரியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு பாடசாலையிலும் சாரணர் இயக்கங்களை வினைத்திறன் வாய்ந்ததாகச் செயற்படுத்தும் நோக்குடனேயே இச்செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-405)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருதொகுதி படகுகள்!

### கியுடெக் நிறுவனம் வழங்கியது

புதுக்குடியிருப்பு,ஓக.5

கியூடெக் நிறுவனத்தின் கரிதாஸ் அமைப்பினரால் ஒருதொகுதி படகுகள் வழங்கப்பட்டன.

ஆழிப்பேரலையினால் தொழிலை இழந்த முல்லைத்தீவு மக்களுக்கு கியூடெக் நிறுவனம் சுமார் 50 படகுகளை வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு முல்லைத்தீவில் கடந்த 27 ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்தில் அதன் தலைவர் அ.மரியதாஸிடம் படகுகள் கையளிக்கப்பட்டன.

தமிழீழத் தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்டக் கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினை முல்லைத்தீவு உதவிப் பங்குத் தந்தை ஏற்றினார்.

படகுகளை வைபவரீதியாகக் கரிதாஸ் அமைப்பின் பணிப்பாளர் அனேன் சமாசத் தலைவரிடம் கையளித்தார். (த-353)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு இலவச தொழிற்பயிற்சிகள் ஆரம்பம்

வட்டக்கச்சி, ஓக.5

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டோருக்கான நான்கு பயிற்சிநெறிகள் முல்லைத் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உலகக் கனேடியப் பல்கலைக்கழக சேவையின் அனுசரணையுடன் தையல், தொழில்நுட்பம், வீட்டு மின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல், படகு வெளியிணைப்பு, இயந்திரம் திருத்துதல் போன்ற பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன. இந்தப் பயிற்சிநெறிகள் அனைத்தும் இலவசமாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடன் கணனிப் பயிற்சி நெறிகளும் நடத்தப்பட்டுவருகின்றன. அடுத்த இருதொகுதி மாணவர்கள் இந்தக் கற்கை நெறிக்காக உள்வாங்கப்படவுள்ளனர். (த-405)




போரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனம் வருமான அதிகரிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் நொச்சிமுனை மீனவர் ஒருவருக்கு மேற்படி நிறுவனப் பணிப்பாளர் ஒருதொகுதி வலைகளை வழங்குவதையும் விவசாயி ஒருவருக்கு நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை நிறுவன இணைப்பாளர் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

## ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

புதுக்குடியிருப்பு,ஓக.5

'நட்புடன் உதவுவோம்' என்ற தொனிப் பொருளில் முல்லைத்தீவு வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கடந்த 18 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை வதிவிடப்பயிற்சியாக நடைபெற்ற இந்தப் பட்டறையை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஜி.ரி.இசற் நிறுவனமும் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தினரும் இணைந்து நடத்தினர்.

இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த 27 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகின. மங்களவிளக்கினை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஏற்றிவைத்தார்.

ஆசியுரையினை முல்லைத்தீவு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா வழங்கினார். தலைமையுரையினை குரவில் தமிழ் வித்தியாலய ஆசிரியர் சி.சிவராசா ஆற்றினார். நற்சிந்தனையை வற்றாப்பளை மகா வித்தியாலய ஆசிரியர் சிவகுகன் வழங்கினார்.

தொடர்ந்து புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலய ஆசிரியை பவானி 'உளநலம் உயர்ச்சிக்கு வழி' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. சான்றிதழ்களை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், கல்விக் கழகத்தைச் சேர்ந்த வழுதி ஆகியோர் வழங்கினர். (த-353)

## சிலாவத்தை வித்தியாலயத்தில் புதிய கட்டடம் திறப்பு

புதுக்குடியிருப்பு,ஓக.5

முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா கடந்த 27ஆம் திகதி காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் க.திருக்குமரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வுகளில் மங்கள விளக்கினை முல்லைத்தீவு உதவிப் பங்குத் தந்தையும், ஆசிரியர் சிவஸ்ரீ க.விநாயகமூர்த்தி ஐயாவும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றினார்.

பாடசாலைக் கொடியினை அதிபர் க.திருக்குமரன் ஏற்றினார்.

பெயர்ப்பலகையினை பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

முதலாவது மண்டபத்தினை வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். இரண்டாவது மண்டபத்தினை சேவாலங்கா பணிப்பாளர் கண்ணன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் முல்லைத்தீவு உதவிப் பங்குத்தந்தை பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ. சிவராசா, வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கோட்டக்கல்விப் பணிப்பாளர் மா.அன்ரனி ஜெகநாதன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

ஆசிய அபிவிருத்திவங்கியின் நிதியுதவியுடன் நிகொட் நிறுவனத்தினரால் இவ்விரு மண்டபங்களும் அமைத்துக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-353)

## விசுவமடுப் பிரதேசத்தில் அரசியல் கருத்தரங்குகள்

பரந்தன்,ஓக.5

விசுவமடு பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்குகள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

பிரதேச ரீதியாக மக்கள் செயலணிக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுவருகின்றன. தற்போது கிராம ரீதியாகச் செயலணிக்குழுத் தெரிவுகள் இடம்பெறுவதுடன் சமகால அரசியல் கருத்தரங்களும் இடம்பெற்றுவருகின்றன.

இந்தக் கருத்தரங்குகளில் விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலர் வ. பத்மநாதன், விசுவமடு பிரதேச மக்கள் செயலணிக்குழுத் தலைவர் சி.தணிகாசலம், செயலாளர் பாலசுந்தரம், கிராம சேவையாளர் செல்வவிநாயகமூர்த்தி, விசுவமடு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மு.சோழநிலவன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கிவருகின்றனர். (த-352)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## ஆசிரியர்களுக்கு பிரிவுபசார விழா

புதுக்குடியிருப்பு, ஓக.5

புதுக்குடியிப்பு கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நீண்டகாலம் சேவையாற்றி இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கு பிரிவுபசார நிகழ்வு கடந்த 28ஆம் திகதி மதியம் ஒரு மணியளவில் நடைபெற்றது.

அதிபர் செல்வி வசந்தி கந்தையா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கள விளக்கினை முல்லை.மாவட்ட கல்விக்கழக இணைப்பாளர் க.இரத்தினசிங்கம் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.சிவராசாவும் கலந்துகொண்டு உரையாற்றினார். (த-353)




வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு அதன் பழைய மாணவரான வைத்திலிங்கம் யோகலிங்கம், றோணியோ இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்தார். அதனைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த மாதம் இடம்பெற்றது.

வை.யோகலிங்கம் அதனை வழங்க, பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி பூலட்சுமி பொன்னுத்துரை பெற்றுக்கொள்கிறார். யோகலிங்கத்தின் பாரியாரும் பிள்ளைகளும் அருகில் உள்ளனர். (த-405)

# அந்தியேட்டி அழைப்பு

## அமரர் நடராசா செல்வநாயகம்

பிறப்பு: 30✻10✻1941
இறப்பு: 19✻06✻2005



19-06-2005 அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் *நடராசா செல்வநாயகம்* அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் ஆடி 20 ஆம் நாள் இன்று (05-08-2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள எமது 'நந்தன்வாசா' இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி,**
**மக்கள், மருமகன்,**
**பேரப்பிள்ளை.**

'நந்தன்வாசா'
15/4, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(38485) (14-26-19)

---

## தீவுப்பகுதி தெற்கு (வேலணை) பிரதேச சபை, வேலணை

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் - 2005

தீவுப்பகுதி தெற்கு (வேலணை) பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்க்குறிப்பிட்டிருக்கும் வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் யாவும் 12.08.2005ஆம் திகதி முதல் 22.08.2005 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையும் வேலணை பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.
02. கேள்விப்பத்திரங்கள் யாவும் 22.08.2005ஆம் திகதி நண்பகல் 12மணிக்கு முன் *செயலாளர், பிரதேச சபை, வேலணை* என்னும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்பட வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்கள் யாவும் 23.08.2005 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்குத் திறந்து கேள்விகள் பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தோர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கமுடியும்.
04. கேள்விகள் ஏற்பதும் நிராகரிப்பதும் கேள்விச் சபையின் முடிவாகும்.
05. மேலதிக விவரங்கள் எல்லாவற்றுக்கும் வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளமுடியும்.

| தொடர் இல. | வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 01. | மண்டைதீவு பிரதேச குடிநீர் விநியோகவசதியை மேம்படுத்த நான்கு (04) சீமெந்திலாலான குடிநீர் தொட்டிகள் அமைத்தல் | 4000.00 | 400.00 |
| 02. | புங்குடுதீவு பிரதேச குடிநீர் விநியோக வசதியை மேம்படுத்த நான்கு (04) சீமெந்திலாலான குடிநீர் தொட்டிகள் அமைத்தல் | 4000.00 | 400.00 |
| 03. | பிளாஸ்ரிக் கொள்கலன் (ரைப்புடன்) அத்துடன் இரும்பிலாலான தாங்கிகள் வழங்கல் | 200.00 | 100.00 |
| 04. | நசரேத் பாலர் பாடசாலைக்கு பிளாஸ்ரிக் கதிரைகளும் மரத்திலாலான மேசைகளும் வழங்கல் | 100.00 | 50.00 |
| 05. | பாரதி மற்றும் காந்திஜி சனசமூக நிலையங்களுக்கு பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கல் | 200.00 | 100.00 |
| 06. | அம்பிகை நகர் சனசமூக நிலையம் திருத்தம் | 200.00 | 100.00 |
| 07. | நேதாஜி முன்பள்ளி திருத்தம் | 200.00 | 100.00 |
| 08. | செட்டிபுலம் சனசமூகநிலையத் திருத்தம் | 200.00 | 100.00 |
| 09. | திருவள்ளுவர் சனசமூக நிலையத் திருத்தம் | 200.00 | 100.00 |

**குறிப்பு:** *தொடர் இலக்கம் 03, 04, 05 ஆகிய வேலைத்திட்டங்கள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவிருப்பதினால் குறித்த நிறுவனங்கள் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கவும்.*

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்,
செயலாளர், பிரதேச சபை, வேலணை.

(சி-44405)(26-14-19)

---

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பு அலகிற்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கான

# பதவி வெற்றிடங்கள் (தற்காலிகமானவை)

*முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பிற்கான அலகிற்கான மாவட்ட முகாமையாளர் அலுவலகத்திற்குக் கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| கோரப்படும் பதவிகள் | தேவைப்படும் ஆளணி |
|---|---|
| 01. தொழில்நுட்ப உதவியாளர் | 01 |
| 02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் | |
| (1) முதுநிலை | 01 |
| (2) இளநிலை | 01 |
| 03. திட்ட உதவியாளர் | 01 |
| 04. தரவுநிரல்படுத்தும் உத்தியோகத்தர் | 01 |

மேற்படி பதவிகளுக்குக் கீழ்வரும் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் 20-08-2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் *அரசாங்க அதிபர்,கச்சேரி, முல்லைத்தீவு* என்ற முகவரிக்கு விண்ணப்பிப்பதுடன், கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பிற்கான அலகு.............................. பதவி வெற்றிடம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சொந்த இடமாகக்கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*மேற்படி பதவிகளுக்கு எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:*

*(1)* தொழில்நுட்ப உதவியாளர்
- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.) பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

*(2)* தொழில்நுட்ப உத்தியோகத்தர்
*(1) முதுநிலை உத்தியோகத்தர்*
- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.) அல்லது மத்தியதர தொழில்நுட்ப சேவையில் (M.L.T.) தரம் 1 இல் உடையவராகவும் -
- அத்துடன் கூடிய சேவை அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

*(11) இளநிலை உத்தியோகத்தர்*
- க.பொ.த. (சா/த) இல் கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறுபாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்,
- கட்டட நிர்மாணத்துறையில் 10 வருட தொழில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

*(3) திட்ட உதவியாளர்*
- புவியியல் அல்லது சமூகவியல் பாடங்களைக் கற்று பட்டதாரியாக இருத்தல் வேண்டும். சமூகவியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*(4)* க.பொ.த. (சா/த) இல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், கணனித்துறையில் கூடிய தகைமைகளையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**திருமதி இமெல்டா சுகுமார்,**
*அரசாங்க அதிபர்,*
*முல்லைத்தீவு மாவட்டம்.*

(சி-44407) (26-14-19)

# இலங்கை அரசின் திட்டமிட்ட செயலால் தமிழரின் சுதேச மருத்துவம் பாதிப்பு

## தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் கவலை

கிளிநொச்சி, ஓக.5

இலங்கை அரசின் திட்டமிட்ட நடவடிக்கையால் தமிழர்களது பாரம்பரிய சுதேச மருத்துவம் தரமிழந்து வருகிறது.

- இவ்வாறு கவலை தெரிவித்தார் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன்.

யாழ்.லங்கா சித்தமருத்துவக் கல்லூரியில் இடம்பெற்ற சுதேச மருத்துவ சேவைத்தர நிர்ணயக் குழுக் கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கலந்துரையாடல் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமை உரையினை வைத்திய கலாநிதி திருமதி பஞ்சராசா ஆற்றினார். அவர் கூறுகையில் ஒரு சில சுதேச பட்டதாரி மருத்துவர்கள்தான் சுதேச மருந்துகளை உற்பத்தி செய்து பயன்படுத்துகின்றனர். ஏனையோர் ஆங்கில மருத்துவ சேவையை நாடிச் செல்கின்றனர். எமக்கு ஒரு சித்த மருத்துவம் உருவாக்கப்பட வேண்டும். இதனால், பல நன்மைகள் ஏற்படும். பல வகையான நோய்களுக்கும் சித்த மருந்துகள் உள்ளன என்றார்.

இதில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்துத் தெரிவித்தபோது -

பக்கவிளைவுகளற்ற நிலையில் சுதேச மருத்துவத்தால் நோயைக் குணமாக்கக்கூடிய தன்மை காணப்படுகின்றது. இதனை மேற்குலக நாடுகளும் தென்னிலங்கையும் புரிந்து கொண்டு அதனை வளர்க்க பாடுபட்டு வருகின்றன. ஆனால், நாம் ஆங்கில மருத்துவ சேவையில் மோகம் கொண்டு வருமானத் தொழிலாக இதனை ஆக்க முயற்சிப்பது வேதனைக்குரிய விடயம். நிறைய வசதிகள் இருந்தும் நாம் ஒன்றிணைந்து செயற்படத் தவறுவதனால் பல முன்னேற்றங்களைக் காணமுடியாத நிலைதோன்றியுள்ளது. கடந்த காலங்களில் இலங்கை அரசின் திட்டமிட்ட செயலால் எமது பாரம்பரிய மருத்துவ சேவை தரமிழந்து சென்றுகொண்டிருக்கின்றது. இதற்கு நாம் எல்லாம் ஒன்றிணைந்து எமது பாரம்பரிய மருத்துவ சேவையின் தரத்தை வளர்க்கவும் மேம்படுத்தவும் பாடுபடவேண்டும். அதேவேளை சுதேச மருத்துவ சேவை தரநிர்ணயக் குழு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் தரக்கட்டுப்பாட்டைப் பாதுகாக்க வேண்டும்.

இக்குழு ஒன்றிணைந்து யாப்புத் தயாரித்து அரச அதிபர் செயலகத்தில் பதிவுமேற்கொண்டு பணியாற்றுவதன் மூலம் சிறந்த சேவையினை ஆற்றமுடியும். அதுமட்டுமன்றி, அதன் முக்கிய செயற்பாடாக மருந்துகள் தரநிர்ணயம், மூலப்பொருள்கள் தரநிர்ணயம், மருத்துவர்கள் தரநிர்ணயம் என்பவற்றைப் பரிசீலிக்கும் தரம் குறைவாகக் காணப்படும் மருத்துவர்களை தரமுயர்த்த மேலதிக பயிற்சிகளும் வழங்க இக்குழு ஒழுங்கு செய்யும். அதற்காக ஒரு பயிற்சிக் கல்லூரியை உருவாக்கப் பாடுபடவேண்டும்.

முதலில் எந்தெந்த இடத்தில் என்னென்ன மூலவளங்கள் இருக்கின்றன எனக் கண்டறியப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து நவீன தொழில்நுட்பத்தில் மருந்துகள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார் அவர்.

சபையில் இருந்த யாவரும் நிச்சயமாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றில் இதுவும் ஒன்று எனவும், இக்குழுவைச் செம்மையாகவும் சீராகவும் நடத்தப்பாடுபடுவதாகவும் தெரிவித்தனர். (ஒ)

## மாகாண தமிழ்தினப் போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு

அச்சுவேலி, ஓக.5

வவுனியாவில் இடம்பெறவுள்ள வடக்கு - கிழக்கு மாகாணமட்டத் தமிழ்தினப் போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் தேவையான ஆவணங்களைத் தவறாது எடுத்து வரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணமட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ்த்தினப் போட்டிகள் வவுனியாவில் நடைபெறவுள்ளன.

மாகாணமட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பிறப்புச் சான்றிதழ், மாணவரின் ஆள் அடையாள அட்டை, சம்பந்தப்பட்ட பாடசாலையில் கல்விகற்கின்றார் என்பதை உறுதிப்படுத்தும் பாடசாலை அதிபரின் கடிதம் என்பனவற்றுடன் சமுகமளிக்கவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

6ஆம் திகதி போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்னரும் 7ஆம் திகதி நிகழ்வுகளில் கலந்தகொள்ளும் மாணவர்கள் 6ஆம் திகதி 2மணிக்கு முன்னரும் தமது வரவுகளை வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



தும்பளை படகுத் தொழிற்சாலைக்கு படகுகளை எடுத்துச்செல்வதற்கான இழுவை வாகனங்களை வடக்கு- கிழக்கு இணைப்பு ஏ.ஜே.நிறுவனம் வழங்கியது. படகுத் திருத்தப் பணி மேற்பார்வையாளர் கிருஷ்ணகுமாரிடம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமார் இழுவை வாகனங்களுக்கான ஆவணங்களைச் சம்பிரதாயபூர்வமாகக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

தும்பளை படகுத் தொழிற்சாலையின் வடக்கு - கிழக்குக்கான இணைப்பாளர் கே.தர்மசீலன், கடற்புலிகளின் வடமராட்சி அரசியற்றுறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)

## கணனிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஓக.5

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தென்மராட்சி இலவச கணனிக் கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களில் முதலாம் பிரிவினருக்கான பரீட்சைகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அனைத்து மாணவர்களையும் இப்பரீட்சைக்கு தவறாவது தோற்றுமாறு சர்வதேச மாணவர் பேரவையின் நிர்வாகி கேட்டுள்ளார். (எ)

## குடத்தனை மருத்துவ முகாமில் 315 பேர் பயன் பெற்றனர்

வடமராட்சி, ஓக.5

வடமராட்சி லயன்ஸ் கழகம், வடமராட்சி கிழக்கு குடத்தனையில் அண்மையில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் 315 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

லயன்ஸ் கழகத் தலைவர் வி.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சிகிச்சை முகாமில் 180 பேருக்கு கண்கள் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்பட்டன. பொது மருத்துவசிகிச்சையில் 70 பேரும், பற்சிகிச்சையில் 65 பேரும் சிகிச்சை பெற்றனர் எனக் கூறப்பட்டது.

பொதுமருத்துவ சிகிச்சையினை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி எஸ்.கதிரைவேற்பிள்ளை தலைமையில் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்களும், பற்சிகிச்சையை பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை பல்வைத்தியர் டாக்டர் வி.ஜெயராஜாவும் மேற்கொண்டனர். (எ-173)

## வீடமைப்புத் திட்டம் குறித்த பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஓக.5

அடுத்த ஆண்டில் நடைபெறவுள்ள 2ஆம் கட்ட வீடமைப்புத் திட்டம் தொடர்பான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

உலக வங்கியின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டம் தொடர்பாகவே இப்பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் சகல பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், அபிவிருத்தி இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண புனர்நிர்மாண வீடமைப்புத் திட்ட தலைமை அலுவலக அதிகாரிகள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு கருத்தூட்டல் பயிற்சிகளை வழங்கவுள்ளனர் என புனர்நிர்மாணத் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார். (எ-202-204)

## தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் கணித, விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி,ஓக.5

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை மாணவர்களிடையே வகுப்பு ரீதியாக கணித, விஞ்ஞான பாட விநாடிவினாப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**கணித பாடப் போட்டி**

தரம் - 6 - சி. செந்தூர்க்குமரன் - கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

தரம் - 7 பா.சாகித்தியன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம் - 8 - ச.உமைப்பிரியை - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம் - 9 - ஜெ.ஜெயதர்சினி சாவகச்சேரி இந்துக் கல்லூரி .

தரம் - 10 - ப.மதுவந்தி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம் - 11 இ.ரம்யா - மட்டுவில் சந்திர புரஸ்கந்தவரோதய ம.வி.

**விஞ்ஞான பாடப்போட்டி**

தரம் - 7 - செ.சாருகா - மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி.

தரம் - 8 - ச.உமைப்பிரியை - சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

தரம் - 9 - வ.கோபிகா - மீசாலை வீரசிங்கம் ம.வி.

தரம் - 10 - ப.மதுவந்தி - சாவகச்சேரி இந்துக்கல்லூரி .

தரம் - 11 - ச.ரகுராஜ் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி.


ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கான போட்டிகளில் கணித பாடம்

தரம் - 6 - ரி. அபிநயா

**விஞ்ஞான [illegible]டம்**

தரம் -7 - த. அனோஜன்.

(ப- 117)




யாழ்ப்பாணம், ஓக.5

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் ஆடிப்பூரத் திருவிழா (பூரகர்மா) எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறும்.

அன்றையதினம் மூலமூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் எழுந்தருளி அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகமும் நவோத்திர சகஸ்ர மகாசங்காபிசேகமும் ஏனைய மூர்த்திகளுக்கு விசேட அபிசேகமும் இடம்பெறும். (எ-173)

* * *

வலி.தெற்கு ஓக.5

கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை பகல் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-152)

* * *

யாழ்ப்பாணம் ஓக.5

தொல்புரம் மேற்கு, மன்னதோட்டம் ஜெயஜோதி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஆடிப்பூரத் தினமான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை அபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட சொற்பொழிவுகள் இடம் பெற்று வருகின்றன. (எ-202)

* * *

வலி.தென்மேற்கு ஓக.5

பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 27ஆம் திகதியன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பெருவிழாவில் நாளை சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாதகல் சம்வில்துறை தீர்த்தக்கரையில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ-135)

* * *

சில்லாலை புனித கதிரைமாதா ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 14ஆம் திகதியன்று நற்கருணை திருவிழாவும் 15ஆம் திகதியன்று காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அதனை அடுத்து திருச்சொரூப பவனியும் நடைபெறும். (எ-135)

* * *

சங்கானை,ஓக.5

காரைநகர் அழகாபுரி வைரவ முருகன் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-29-202)

## அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

குருநகர்,ஓக.5

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடப் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு நடைபெறும் என செயலாளர் எஸ்.ஜெகநாதன் அறிவித்துள்ளார். (எ-51)

## தேசிய கல்வி நிறுவக சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், ஓக.5

தொலைக்கல்வி ஆசிரியப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த ஆசிரியர்களின் ஒரு தொகுதி சான்றிதழ்கள் தேசியக் கல்வி நிறுவகத்தில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

திருஞானம் டார்வின் ஜெயசீலன் (விஞ்ஞானம்), ஞானசேகரம் செல்வநாயகம் (சமூகக்கல்வி), சுப்பிரமணியம் சிவலோகநாதன் (கணிதம்), இராஜகுலேந்திரன் இராஜராஜ் (கணிதம்) ஆகியோரின் சான்றிதழ்களே இவ்வாறு எடுத்துவரப்பட்டுள்ளன.

இவர்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

மனோகரி துரைசிங்கம்(ஆரம்பக் கல்வி), புகழினி கந்தசாமி(ஆரம்பக் கல்வி), சிவகுருநாதன் இந்திராதேவி(ஆரம்பக் கல்வி), சந்திரமௌலீசன் நாகலிங்கம் கனகசபாபதி (கணிதம்),வாசுகி சாந்தலிங்கம்(பரதநாட்டியம்) ஆகியோரின் சான்றிதழ்கள் வழங்கத் தயார் நிலையில் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (எ-204)



ஸ்ரீ காயத்திரீ தேவி ஜோதிட நிலையம்
புண்டித் சுவாமிநாதன்
உலகத்தில் உங்களுக்கு ஏற்படும் இன்பம்- துன்பம், நன்மை- தீமைகள் என்பவற்றை கூறுவார். இவரை ஒரு முறை சந்தியுங்கள்

கைரேகை, குடும்பத்தில் கணவன்- மனைவிக்கிடையே உள்ள பிரச்சினை, கல்வி, வீடு, நிலம், பூமி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வியாபாரம், இலட்சுமிகடாட்சம், திருமணம், குழந்தைப்பாக்கியம், காதல் விவகாரம், எதிரிகளினால் ஏற்படும் பிரச்சினை, ஆரோக்கியம், பிணி, நோவுகள், பணக்கஷ்டம், நீதி மன்ற வழக்குகள் ஆகிய சகல காரியமும் பார்க்கப்படும்.

சந்திக்கவேண்டிய நேரம்-காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை
தொடர்புகளுக்கு: A.S.N சுற்றுலாவிடுதி, 392-392 A மணிக்கூண்டு வீதி (பெருமாள் கோவில் வீதி ).யாழ்ப்பாணம்.
T.P.NO: 021- 222 -5399 (38362)(51-16-34)


**கூட்டம்**

யாழ். நகர் மைய றோட்டறக்கட் கழகம் நடத்தும் இணைந்த கூட்டம் நாமைறு தினம் ஞாயிறு பி.ப. 4 மணிக்கு உதயன் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. யாழ். வலயத்திற்குட்பட்ட றோட்டறக் கழகங்களை இணைத்து இக்கூட்டம் நடைபெறவுள்ளது. எ-202)




உ
அம்பாள் துணை

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்
ஆடிப்பூர (ருதுசாந்தி) திருவிழா
07.08.2005 ஞாயிற்றுக்கிழமை

**அம்பிகை அடியார்களே!**

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயிலில் எதிர்வரும் 07. 08. 2005ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூரத்திருவிழா (ருதுசாந்தி) மிகவும் சிறப்பான முறையில் நடைபெற திருவருள்கூடியுள்ளது அன்று காலை 10. 30 மணிக்கு மூலமூர்த்தி அம்பாளுக்கு நவோத்தர சகஸ்திர மஹா கலசாபிஷேகமும் (1008 கலசம்) எழுந்தருளி அம்பாளுக்கு அஸ்டோத்தர சதகலச அபிஷேகமும் (108கலசம்) ஏனைய மூர்த்திகளுக்கு விசேடஅபிசேகங்களும் நடைபெறும். அபிஷேகங்களைத் தொடர்ந்து பூஜை "பூரகர்மா" (ருதுசாந்தி) தீபாராதனை திருவூஞ்சல் வேதஸ்தோத்திர திருமுறைப்பாராயணம், ஆகியவையும் அதனைத்தொடர்ந்து அம்பாள் அழகிய தாமரைப்பூ வாகனத்தில் ஆரோகணித்து வீதியுலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து அருட்பிரசாதமும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபையினரால்அமுதசுரபி அன்னதான சபை மண்டபத்தில் அடியார்களுக்கு அன்னதானம் (மகேஸ்வரப்பூஜை) மிகவும் சிறப்பான முறையில் வழங்கப்படும்

உற்சவ சிவாச்சாரியார்கள்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் ஆதீனகுருமணிகள்
"சிவபூஜாகலப்நிதி" சிவஸ்ரீசாமிநாத பாலசுந்தரக்குருக்கள்
"ஆகம பிரவீணா" சிவஸ்ரீ கைலாசநாத வாமதேவக்குருக்கள்

விசேட மேளக்கச்சேரிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. அடியாள் உரியகாலத்தில் அம்பாளின் சந்நிதானத்திற்கு வருகைதந்து நிகழ்வுகளை கண்டு, அன்னையை வழிபாடு செய்து இஷ்டசித்திகளை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (38459)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்
ஆடிப்பூரத்திருவிழா உபயகாரர்கள்



**Save the Children** in Sri Lanka

We are looking for a committed & energetic individual to join our team as:

**Finance Assistant**

**Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.**

The aim of the post is to assist and support the Administrator Finance in smooth running of the finance unit.

**Base Station**
Jaffna

**Qualifications and experience:**
**Essential**

- Successfully completed a degree in Finance Management or an equivalent certificate.
- About 3 years work experience in a relevant post.
- Working experience in partner management
- Excellent interpersonal skills
- Excellent Computer skills specially working on a spreadsheet.
- Good knowledge of spoken and written English and fluency in Tamil
- Good organizational skills
- Methodical in work
- Team spirit

**Desirable**
- Knowledge of a Third Language

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

**Duration :**
The above position would be initially for a period of **01 year**

Please note that all positions in SCiSL are subject to transfer.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before **9th of August 2005** to:

**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur, Jaffna.**

* No telephone enquiries please.
* Only short listed candidates will be contacted.


கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை

# திருமதி அன்னராணி சண்முகலிங்கம் B.A., S.L.T.S.-I அவர்களின்
# சேவைநலன் பாராட்டுச் சிறப்பு மலர் -05.08.2005

### அன்பாகப்பழகிய ஆசிரியை

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியை திருமதி அன்னராணி சண்முகலிங்கம் அவர்கள் எமது கழகத்தின் நீண்டகால உறுப்பினர். எமது கல்லூரிக்கும், கழகத்திற்கும் நற்பணி ஆற்றியவர். தனது உடல் நலம் சற்றுக் குன்றியதன் காரணமாக நான்கு மாதங்களுக்கு முன்பாக ஓய்வெடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளானார். தனது சேவைக்காலத்தில் அதிபர், ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்களுடன் அன்பாகப் பழகியவர் எமது கல்லூரியின் தமிழ்த்துறைக்கு அவர் ஆற்றிய சேவை மகத்தானது.

அவர் உடல் நலத்துடன் பல்லாண்டுகாலம் வாழ்ந்து இக்கிராமத்திற்கும் கல்லூரிக்கும் இயன்ற சேவையை வழங்க இறைவன் அருள்புரிவாராக.

மு.சுகுமார்
*தலைவர் ,ஆசிரியர் கழகம்.*

### மகத்தான சேவை

திருமதி அன்னராணி சண்முகலிங்கம் அவர்கள் கடமையுணர்வும் விடாமுயற்சியும் மிக்கவர். தனது மாணவர்களின் நலனிலும் முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை கொண்டவர். தமிழ்மொழி, சமூகக்கல்வி போன்ற பாடங்களைக் கற்பிப்பதில் திறமை மிக்கவர். கற்பிப்பதில் தனக்கென ஒரு தனிவழி வகுத்து வெற்றி கண்டவர். கல்வித் திணைக்களத்தின் கற்றல், கற்பித்தல் வழிகாட்டல்களையும் வழிமுறைகளையும் நன்கறிந்தவர். ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளாகத்தான் கற்ற கல்லூரியில் அவர் செய்த சேவை மகத்தானது. அவரது சகோதரிகளும், சகோதரனும் எமது கல்லூரியின் பழைய மாணவர்கள். அன்னராணி அவர்கள் மகிழ்ச்சியான வாழ்வு வாழ எமது நல்வாழ்த்துக்கள்.

சுடர் இ. மகேந்திரன்
*முன்னாள் அதிபர்.*




**சேவை விவரம்**

நியமனம் -01-11-1976 → 17-05-78
க/அஸ்ஹார் மகாவித்தியாலயம்
அக்குறணை
18-05-78 → 05-05-82
க/மீறா மகாவித்தியாலயம்
கட்டுகஸ்தோட்டை.
06-05-82 → 17-01-85
கொ/கொழும்பு இந்துக்கல்லூரி
இரத்மலானை
18-01-85 → 26-03-89
யா/இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்.
27-03-89 → 17-06-90
யா/இணுவில் சைவப்பிரகாசம்
மகாவித்தியாலயம்
இணுவில்
18-06-90 → 30-06-2005
யா/கொக்குவில்இந்துக்கல்லூரி
கொக்குவில்.

### ஆரவாரமற்ற அமைதியான ஆசிரியை

திருமதி அன்னராணி சண்முகலிங்கம் அவர்களை நான் அதிபராக இருந்தவேளை எமது கல்லூரியில் இணைத்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் இக்கல்லூரியில் கடந்த 15 வருடகாலமாக ஆற்றிய சேவை மகத்தானது. அமைதியாக ஆரவாரமின்றித் தனது கடமைகளைத் திறமையாக நிறைவேற்றி மாணவர்களின் நன்மதிப்பினைப் பெற்றவர். அவர் தான் கற்பிக்கும் பாடங்களில் கொண்ட பாண்டித்தியமும் மாணவரின் நலனில் கொண்ட அக்கறையும் தனது சகபாடிகளுடனும் அதிபருடனும் கொண்ட நல்லுறவுமே அவர் கல்லூரியில் பெற்ற நன்மதிப்புக்குக் காரணமாகும். அவர் நீடூழி வாழ்ந்து சமூகத்திற்குக் கல்வித் தொண்டு ஆற்றவேண்டுமென இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

அ. பஞ்சலிங்கம்
*முன்னாள் அதிபர்.*

### கடமை உணர்வுடன் சேவையாற்றியவர்

திருமதி அன்னராணி சண்முகலிங்கம் அவர்கள் தமது ஆசிரியப்பணியினை எமதுகல்லூரிக்காகப் பதினைந்து (15) வருடங்கள் ஆற்றியபின்இளைப்பாறியுள்ளார். இவர்எமது . கல்லூரியின் பழைய மாணவர் என்பதுமட்டுமன்றி, இவரது சகோதரர்களும் எமது கல்லூரியில் கல்விபயின்றவர்கள். இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றவர். இவருடைய சகோதரனும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொறியியற்பட்டம் பெற்றவர். கல்விப் பாரம்பரியம் நிறைந்த குடும்பத்திலிருந்து வந்த இவர், தனது ஆசிரியப் பணியைக்கடமையுணர்வுடன் ஆற்றிவந்தவர். மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் போது மிக அரவணைப்புடனும் அமைதியுடனும்போதித்துவந்த நல்லாசிரியை. குறிப்பாக மெல்லக் கற்கும் மாணவர்களின் கல்வியில் மிக அக்கறை செலுத்தி மேலதிக கற்பித்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர். இவர்இங்கு சேவை யாற்றிய காலத்தில் எமது இணைச்செயற்பாடுகளுக்கும் குறிப்பாக, மாணவரைப் போட்டிகளுக்குத் தயார்ப்படுத்துவதிலும் முன்னின்று உழைத்தவர்.எமது கல்லூரிப்பாரம்பரியத்தில் வளர்ந்த இவர் இங்கு கல்விகற்ற மாணவ மாணவியர்களையும் அதே பாரம்பரிய ஒழுங்கு முறையில் நடக்க வழிகாட்டியவர். இவர் ஆற்றிய நற்பணியினைக் கல்லூரிச்சமூகம் பெரிதும் மதித்து, இவருடைய ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்தும் வேளையில் நானும் எனது நல்வாழ்த்துக்களையும் ஆசியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொ. கமலநாதன்
*அதிபர்.*

# இறுதி ஆட்டங்களில் மோதும் அணிகள்



உடுவில் வி.க.



ஜொலிஸ்ரார் வி.க.



கே.ஸி.ஸி.ஸி.வி.க.



சென்றலைட்ஸ் வி.க.

# கூடைப்பந்தாட்டம் இறுதியாட்டம் இன்று

## மின்னொளியில் இரவு 7 மணிமுதல் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக.5

தமிழீழ மாணவர் அமைப்பும் தமிழீழ விளையாட்டுத்துறையும் இணைந்து நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு மின்னொளியில் யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சி.பாப்பா கலந்துகொள்வார். இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் ஜொலிஸ்ரார் வி.கவும் சென்றலைட்ஸ் வி.கவும் மோதுகின்றன.

பெண்கள் பிரிவில் உடுவில் வி.கவும் கே.ஸி.ஸி.ஸி. வி.கவும் மோதும். (3-190)

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக.5

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் இ.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்துகொள்வார். (3-202)

* * *

நவக்கிரி புத்தூர் சரஸ்வதி சனசமூக நிலைய காந்தி முன்பள்ளி விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சனசமூக நிலையத்தின் அருகில் உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் இ.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், சர்வோதய யாழ்.மாவட்ட இணைப்பாளர் சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்வர். (3-202)

* * *

நீர்வேலி வடக்கு மகளிர் பகவான் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தி.கவிதாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நீர்வேலி பிரதேச சபை செயலாளர் த.நடராசா கலந்துகொள்வார்.

(3-202)

* * *

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை மைதானத்தில் நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச சபை செயலர் இ.இராசதுரை கலந்துகொள்வார். (3-28)

## உதய சூரியன் வெற்றி

கலைச்சுடர் சனசமூக நிலையம் தனது 27ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உதயசூரியன் வி.க.வெற்றிபெற்றது.

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் தேவாலய மைதானத்தில் நடந்த இறுதியாட்டத்தில் உதயசூரியன் வி.கவும் சுடர் ஒளி வி.கவும் மோதின.

உதயசூரியன் வி.க. 15:9, 15:7 என்ற கணக்கில் வெற்றியீட்டியது. (3-190)

# 'அஸ்ரா' கிண்ண கிரிக்கெட் - சென்றலை வென்றது இந்து

யாழ்ப்பாணம்,ஒக.5

'அஸ்ரா' கிண்ணத்துக்காக பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 15 பிரிவு ஆட்டம் ஒன்றில் யாழ்.இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

யாழ்.இந்துக்கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது.

பிரியதர்சன், சுரேஸ்குமார் ஆகியோர் முறையே 36, 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

சிவகரன் 5 விக்கெட்டுகளையும் ரதீசன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 43 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஸ்ரீபன்ராஜ், மயூரன் ஆகியோர் முறையே 25, 20 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

உமாநாத் 3 விக்கெட்டுகளையும் கௌரிநாத், பவகதன் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (3-190)

# கொரிய விளையாட்டு விழாவில் முல்லை. மாணவனுக்குத் தங்கப்பதக்கம்



கிளிநொச்சி,ஒக.5

கொரியாவில் நடந்த சர்வமதங்களின் ஐக்கியத்துக்கான விளையாட்டுப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்குபற்றி முதலாவது இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றார் சகாயரட்ணராசா நிரஞ்சன்.

சக்கோட்டையைச் சேர்ந்த இவர், இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்காக அண்மையில் கொரியா சென்றிருந்தார்.

இந்தப் போட்டியில் வெற்றிவாகை சூடிய இவர் இன்று வன்னி திரும்புகின்றார்.

அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய இவர், தற்சமயம் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் கல்விபயின்று வருகின்றார்.

அண்மையில் கொழும்பில் நடந்த கனிஷ்ட தேசிய மெய்வன்மைப் போட்டியில் முதலிடம்பெற்ற இவர், பல்வேறு போட்டிகளில் பங்கேற்றுச் சாதனை புரிந்து வருகின்றார். (3-305)

# கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக.5

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம், கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்திற்காக ஆண்-பெண்களுக்கு இடையில் கூடைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவிருக்கின்றது.

சுற்றுப் போட்டியில் யாழ்.கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்த கழகங்கள் அனைத்தும் பங்குபற்றலாம் எனவும்- எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் இப்போட்டியில் பங்குபற்றவிரும்பும் கழகங்கள் விண்ணப்பத்தினை அனுப்பிவைக்கலாம் என்றும்- போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டி அணி ஒழுங்கு 8ஆம் திகதி கொக்குவில் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும் எனவும் போட்டிகள் யாவும் 10ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (3-190)

# அவயவம் பொருத்தியவர்கள் பங்கேற்கும் சைக்கிள் ஓட்டப்போட்டி

குடாநாட்டில் அவயவம் பொருத்தியவர்களிடையே சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

மிதிவெடி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு யுனிசெவ் நிறுவனமும் அதனுடன் இணைந்து இயங்கும் நிறுவனங்களும் பல விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தவுள்ளன.

இதன் ஓர் அங்கமாக ஜெய்ப்பூர் நிறுவனத்தில் அவயவம் பொருத்தியவர்களுக்காக இந்தச் சைக்கிள் ஓட்டப் போட்டி ஏற்பாடாகியுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் ஜெய்ப்பூர் பயனாளிகளான இருபாலாரும் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை ஜெய்ப்பூர் நிறுவனத்தில் ஒப்படைக்கலாம் என்றும்-

போட்டி நடைபெறும் திகதி, நேரம், இடம் போன்ற விவரங்களை ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும்-

ஜெய்ப்பூர் நிறுவன நிர்வாகச் செயலாளர் தெரிவித்தார். (3-202)

# கூட்டுறவாளர்களிடையே தாச்சிச் சுற்றுப்போட்டி

வலிகாமம் பிரதேச பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், 83 ஆவது ஆண்டு சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி அங்கத்துவ சங்கங்களுக்கிடையே தாச்சிச் சுற்றுப்போட்டியொன்றை எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

வலிகாமம் பிரதேசத்திற்கு உட்பட்ட சங்கானை, தெல்லிப்பழை, சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில், காரைநகர் பகுதிகளைச் சேர்ந்த சங்கங்களுக்கு இடையே இப்போட்டியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இப்போட்டிகள் இடம் பெறும். (3-86)

## 03.08.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 200492233 இலிருந்து
200510582 வரை

சீட்டிழுப்பு இல. 1629

12 62 66 69 சுப்பர் எண் 14

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.20,00,000/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 20,00,000/- | 20,00,000/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 33 | 5,000/- | 1,65,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 487 | 1,000/- | 4,87,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,581 | 500/- | 7,90,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,841 | 40/- | 9,53,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,687 | 20/- | 4,53,740/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,38,647 | 10/- | 33,86,470/- |
| | | மொத்தம் | 92,36,350/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 97,36,350/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 20,00,000/-

தொடர் இல. 300470839 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 06 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 200500328-1-86 |
| அம்பாறை | 200502354-6-90 |
| திருகோணமலை | 200492419-1-81 |
| மாத்தளை | 200504695-2-54 |
| அம்பாறை | 200507980-5-55 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



## United Nations World Food Programme SriLanka Vacancy Announcement

*Deadline for Application: 10 August,2005*

The World Food Programme (WFP), the food aid organization of the United Nations, is seeking applications from Sri-Lankan national candidates from the Northern province to fill the following positions.

1. **Post Title: Driver** Number of posts: 2 Grade: GS 2
   Type of Contract: Special Service Agreement
   Duty Station: WFP Sub- Office-Jaffna/Kilinochchi

**Responsibilities:**
- Drive office vehicles for the transport of authorized personnel ;
- Plan and schedule routing ; provide information/be in contact with the UN security desk while on duty travel ;
- Collect and deliver mail, documents, and other items ;
- Meet Official personnel at the local airport and facilitate regarding security procedures
- Take care of day- to -day maintenance of assigned vehicles, check oil, water, battery, brakes, tires etc; perform minor repairs and arrange for other repairs and ensure that the vehicle is kept clean ;
- Maintain spare parts inventory and make appropriate arrangement to order parts ;
- Log official trips, daily mileage, gas consumption, oil changes, greasing, etc.
- Maintain records of Drivers' travel and their overtime records ;
- Ensure that the steps required by rules and regulations are taken in case of involvement in an accident;
- Perform other related duties as required.

**Qualifications :**
- Read upto G.C.E O/L ( preferably secondary education) ; Drivers training/ Mechanic training with a valid Driver's license
- Minimum two years of work experience as a Driver; safe driving record; experience in driving various makes of cars; technical knowledge of vehicle repair and maintenance
- Knowledge of driving/traffic rules and regulations and skills in minor vehicle repairs
- Language : Good Oral English ( UN level A or Equivalent), able to read and write English; Singala knowledge will be considered as anadditional asset.

Qualified candidates are invited to submit their application with contact numbers of their own and non related referees under the confidential cover to the address given below on or before 10th August 2005.

**The Head of Sub Office,
World Food Programme(WFP),
873 , Hospital Road,
Jaffna. Phone : 021 222 8173** (38534)


## மாணவருக்குப் பரிசளிப்பு

வலி.தெற்கு,ஓக.5

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்தில் நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் கலை நிகழ்ச்சிகளும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வலிகாமம் கல்வி வலய ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். மாதவகுமாரன், மானிப்பாய் மக்கள் வங்கிக் கிளை உதவிப் பொது முகாமையாளர் எஸ்.சிவபாதவிருதையர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

மாணவர்களின் கலைநிகழ்வுகளும் விழாவில் இடம்பெறவுள்ளன. (ஓ-152)

## தற்காலிக வீதித்தடை அகற்றப்பட்டது

யாழ்.மத்திய கல்லூரியின் முன்பாக உள்ள வீதியில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடை தற்போது அகற்றப்பட்டுள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற யாழ். மத்திய கல்லூரி - யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான வருடாந்தக் கிரிக்கெட் போட்டியின்போது இந்த வீதி யாழ். மத்தியகல்லூரி நிர்வாகத்தால் தடை செய்யப்பட்டிருந்தது.

இந்த வீதித்தடை காரணமாக கார் மற்றும் நான்கு சில்லு வாகனங்கள் இந்த வீதியூடாகச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

தற்போது இந்த வீதித்தடை முற்றாக நீக்கப்பட்டுள்ளமையால் சுலபமாகப் போக்குவரத்து நடைபெற்றுவருகின்றது. (எ-51)

## கடற்றொழிலாளருக்கு மீன்பிடி வலைகள்

வலி.தெற்கு,ஓக.5

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இளவாலை - மாரீசன்கூடலைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு கரிதாஸ் - கியூடெக் நிறுவனத்தினரால் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கடற்றொழிலாளர்கள் மீண்டும் தமது தொழிலை ஆரம்பிப்பதற்கு வசதியாக இந்த வலைகள் வழங்கப்பட்டன. இளவாலை - மாரீசன்கூடல் மீனவர் சங்கத்தினர் இதற்கென 89 பயனாளிகளைத் தெரிவுசெய்திருந்தனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா நான்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன.

மாரீசன்கூடல் பகுதிப் பங்குத் தந்தை வண. பிரான்சிஸ் அடிகளார் மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்விற்குத் தலைமை வகித்தார்.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவன யாழ்ப்பாணப் பணிப்பாளர் வண.சி.ஜி.ஜெயக்குமார் அடிகளால் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன (ஓ-152)

## தொழில்நுட்பக் கல்லூரி பகல்நேர பயிற்சி மாணவர் கவனத்துக்கு!

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த வருடம் பகல்நேரப் பயிற்சிநெறியில் கலந்துகொண்ட மாணவர்களை மூன்றாந்தவணைக்கான மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவைப் பெறுவதற்கு வசதியாகத் தமது கல்லூரி அனுமதி அட்டைகளை விடுமுறைக் காலத்தில் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவுமாறு கல்லூரி அதிபர் என்.யோகராஜன் கேட்டுள்ளார்.

கொடுப்பனவுகள் மூன்றாந்தவணைக்காக கல்லூரி திறக்கப்பட்டதும் வழங்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-202)

## அறிவுறுத்தல் கூட்டம்

பாடசாலை மேம்பாட்டு முன்னோடி வேலைத்திட்டம் தொடர்ப அதிபர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை கால 10 மணியளவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

இதில் நல்லூர் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களைத் த றாது கலந்துகொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட் ளார். (எ-13


**S.L.A.S.**

வழிகாட்டல் வகுப்புகள்
* கிழமை நாள்களுக்கான புதிய பிரிவுஆரம்பம் 08-08-2005 (2 மணி
* சனி, ஞாயிறுக்கான வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

*தெரியாளர்கள் :*
பொது உளச்சார்பு: திரு.அ.குமாரவேல்
பொது அறிவு: திரு.க.குணராசா
தமிழ் : திரு.அ.சண்முகதாஸ்

**புதிய உயர்கல்லூரி.** ஆரியகுளம் சந்தி, யாழ்





இதோ...
வெளிவந்துவிட்டது ஆகஸ்ட் மாத
பூங்கனி
சிறுவர் மாத இதழ்
சிறுவர்கள் விரும்பி வாசிக்கும் சகல அம்சங்களையும் தாங்கி புதிய பரிமாணத்துடன் வெளிவந்திருக்கிற
நாடு முழுவதுமுள்ள
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கிறது
யோசிப்பது எது என்றாலும் வாசிப்பது பூங்கனி
(3850
"வாசிப்பு ஒன்றே பூரணமான எதிர்காலத்தை உருவாக்கு"


## கண்ணீர் அஞ்சலி

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
திருநெல்வேலி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்தின் பொறுப்பதிகாரி
Dr.R. ஞானசேகரம் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி மகேஸ்வரிதேவி இராஜசேகரம்

அவர்கள் 01-08-2005 அன்று காலமான செய்திகேட்டு நாம் ஆழ்ந்த துயரடைவதோடு, அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கால்நடை வைத்திய காரியாலயம்,
தெல்லிப்பழை.

(38535)(26.14.15)

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை பாலசுந்தரம் (ஐயாமணி)

(பிரபல மெக்கானிக்)



71/03, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை பாலசுந்தரம் (ஐயாமணி) 03.08.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அப்புத்துரை ஆகியோரின் அன்பு மகனும் திரு.திருமதி கந்தசாமியின் மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன், சதீஸ்வரன் (பிரிய ஜுவல்லர்ஸ், சித்தன்கேணி), மதீஸ்வரன் (ஸ்ரார் ஜுவல்லர்ஸ், யாழ்ப்பாணம்), பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாஸ்கரதாஸ், தங்கராசா (இந்தியா), இராஜேஸ்வரி (மலேசியா), லோகேஸ்வரி, சத்தியபாமா, புவனேஸ்வரி (பிரான்ஸ்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதாகரி, கருணாநிதியின் மாமனாரும் பிரசாந்தி, கிரிசாந்தி, சூரியப்பிரகாஷ், பிரியங்கா, தர்ஷனன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.08.2005) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம். (38540)(32.14.15.26) தகவல்: மனைவி, பிள்ளைகள்.





LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

# சமுர்த்தி நிவாரணம் பெறத்தவறிய அனைவருக்கும் விரைவில் முத்திரை

## யாழ். செயலக அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.5

சமுர்த்தி முத்திரை பெறத் தவறிய அனைவருக்கும் அவற்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவிடயமாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி முத்திரை பெறத் தகுதியானவர்களுக்கான முத்திரைகள் அண்மையில் யாழ். மாவட்டச் செயலகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

ஆனால், சமுர்த்தி முத்திரை பெறத் தகுதியான பலரும் இந்த முத்திரை விநியோகத்தின்போது தவற விடப்பட்டுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறு தகுதியிருந்தும் முத்திரைபெறத் தவறியவர்களின் பெயர் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன. மேற்படி விவரங்கள் திட்டமிடப்பட்டதும் சமுர்த்தி முத்திரைகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அதிகாரி மேலும் தெரி வித்தார்.

(எ-13)

# கதவு நிலையை திருடியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஓக.5

வீட்டில் வைக்கப்பட்டிருந்த கதவு நிலையைத் திருடிய நபருக்கு 2ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வரணி, இடைக்குறிச்சிப் பகுதியில் உள்ள வீட்டில் கதவின் நிலையைத் திருடினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைதான நபரைக் கொடிகாமம் பொலீஸார் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கினை விசாரித்த நீதிபதி சந்தேக நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 4மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தர விட்டார்.

(ஒ-117)

*யாழ்.இந்துவின் விஞ்ஞான மன்றம் நடத்திய*

# பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ்.இந்துக்கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையில் கடந்த வருடம் நடத்தப்பட்ட கணித விஞ்ஞான பொதுஅறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

24 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றினர் என கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம் வருமாறு-

**கனிஷ்ட பிரிவு**

இ.சாரதாதேவி (வேம்படி மகளிர் உ.பா.), வி.நிஸாந்திகா (வேம்படி மகளிர் உ.பா), ச.பகீரதி (வேம்படி மகளிர் உ.பா), க.மகிந்தன் (நெல்லியடி ம.ம.வித்தி.), சி.மாதுமை (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

**மத்திய பிரிவு**

சி.ஜெயநீதன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ப.பாரதி (வட இந்து மகளிர் கல்லூரி), க.கலைவாணன் (ஸ்கந்தவரோதயா கல்லூரி), க.முரளீதரன் (நெல்லியடி ம.ம.வி.), தி.உலூகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு**

ப.சாலினி (வேம்படி மகளிர் உ.பா), சி.மதுராந்தகா (வேம்படி மகளிர் உ.பா.), ச.சாரங்கன் (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி), த.இநோதாரணி (நெல்லியடி ம.ம. வித்தி.), ம.உமாநந்தினி (வேம்படி மகளிர் உ.பா.).

மேற்படி மாணவர்களுக்கான பரிசில்களும் திறமைச் சான்றிதழ்களும் இம்மாதம் நடைபெறவுள்ள விஞ்ஞான விழாவின் போது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மேலும் 17 ஆசிரிய ஆலோசகர்கள் வடக்கு - கிழக்கு வலயங்களில் நியமனம்

காரைதீவு, ஓக.5

வடக்கு கிழக்கில் மேலும் 17 ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) எஸ்.முருகுப்பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு கிழக்குமாகாணத்திலுள்ள 24 கல்வி வலயங்களில் முன்னர் 7 வலயங்களில் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது 17 கல்வி வலயங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்கள் போட்டிப் பரீட்சை மற்றும் கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் யுனிசெவ் ஸ்தாபன அனுசரணையுடன் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. மாதமொன்றுக்கு 50 லீற்றர் பெற்றோலுக்கான செலவும் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளதென பணிப்பாளர் முருகுப்பிள்ளை மேலும் தெரிவித்தார்.

இவர்களுக்கு உளவள சேவையினை வழங்கவென 42 ஆலோசனை உளவளவாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

(ஒ-84)

# கலைஞானி நினைவாக நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.5

மாமனிதர் கலைஞானி அ.செல்வரத்தினத்தின் 72ஆவது பிறந்ததின நினைவாக கலைஞானி ஞாபகார்த்தக் குழுவினர் ஒரு தொகுதி நூல்களை பல்வேறு நூலகங்களுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

யாழ்.மாநகராட்சி மன்ற நல்லூர் கிளை நூலகம், நல்லூர் பிரதேச சபை, அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் மகாத்மா காந்தி நூல் நிலையம் ஆகியவற்றிற்கு ஒரு தொகுதி நூல்களை குழுவின் சார்பில் மாமனிதர் கலைஞானி அருங்காட்சியக இயக்குநர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அண்மையில் வழங்கினார்.

(எ-202)

# வித்தியாசமான மத அனுபவம்...

*(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இவ்வாறு ஐராவசு முனிவர் சமாதியடைந்த இடத்தில் முளைத்த பூவரசு மரமே இவ்வாலயத்தின் தலவிருட்சமாகப் பேணப்படுகிறது. தல விருட்சமான இந்தப் பூவரசு மரத்தினை அடியார்கள் மிகவும் புனிதமாகப் பேணி வழிபாடு செய்துவருகின்றனர். அதுமட்டுமன்றி இந்தப் பூவரசு மரம் தொடர்பாகப் பல அற்புத நிகழ்வுகள் இன்றும் இடம்பெற்றுக்கொண்டிருப்பதையும் நாம் காணமுடிகின்றது.

சுந்தரம் செல்வராசா என்ற அன்பர் கோண்டாவில் மேற்கு, நந்தாவில் என்ற கிராமத்தில் தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கிறார். இந்த அன்பருக்குச் சல அடைப்புத் தொடர்பாக இரண்டு முறை சத்திரசிகிச்சை செய்தும் அவரது நோய் குணமடையவில்லை. இந்த நிலையில் 17-05-2005 வெள்ளிக்கிழமை அவர் சந்நிதியானை நாடி வந்து ஆற்றில் நீராடி சந்நிதியானை வழிபாடு செய்து சந்நிதியானுக்குப் படைக்கப்பட்ட மருந்து எனக் கூறப்படும் அமுதினை உட்கொண்டபின் சந்நிதியின் தலவிருட்சமான இந்தப் பூவரசு மரத்தின்கீழ் இரவு நித்திரைக்குச் சென்றுள்ளார். அடுத்த நாள் பொழுது விடிய நித்திரைவிட்டு எழுந்தபொழுது அவரது சல அடைப்புக் குணமடைந்து இயல்பான வகையில் சலம் வெளியேற ஆரம்பித்துவிட்டது. இன்று சு.செல்வராசா சுகதேகியாக இயல்பான மனிதனாக நடமாடும் அற்புதம் நடந்தேறியது.

**புலம்பெயர்ந்த அடியார்கள்**

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனது உற்சவம் எமது மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களால் மட்டும் அனுஷ்டிக்கப்படுவதில்லை. கடல்கடந்து புலம்பெயர்ந்த அடியார்கள் தாங்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்தபடியே புனிதமான முறையிலும் விரதம் அனுஷ்டித்தும் கடைப்பித்து வருகின்றனர். அதுமட்டுமல்ல, வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த மக்கள் கடந்த காலங்களில் தாய் நாட்டிற்கு திரும்பமுடியாதசூழல் ஏற்பட்ட நிலையிலும் சந்நிதியான்மீது கொண்டுள்ள பக்தி நிலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலும் இங்கே சந்நிதி உற்சவம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அதேவேளையில், தமது நாட்டில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் அல்லது ஒரு வீட்டில் ஒன்றுகூடி உற்சவத்தில் இடம்பெறுவது போன்ற பூசை முறைகளைக் கடைப்பிடித்து பக்திப்பரவசத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

சம்பியா நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற முருகனடியார்கள் ஆறுமுகம் என்ற அன்பர் வீட்டில் ஒன்றுகூடி 12 வருடங்களாக இவ்வாறான ஓர் உற்சவப் பூசையை நடத்தித் தமது பக்தியை வெளிப்படுத்தியுள்ளனர். அதுமட்டுமன்றி, தற்பொழுது சந்நிதியில் அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஆறுமுக சுவாமிக்குரிய தேருக்கு 11 லட்சம் ரூபாவையும் தமது அன்பளிப்பாக அவர்கள் வழங்கியுள்ளனர். இதேபோன்று கனடாவில் ரொறன்ரோ நகரில் சந்நிதியானுக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டு அங்கே உற்சவம் நடத்தப்படும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


**மூன்று சித்திரத் தேர்கள்**

2003ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்தில் வீதியுலா வந்துகொண்டிருந்த பொழுது அடியார்கள் கண் முன்னே சந்நிதியானுடைய கட்டுத் தேர் குடைசாய்ந்த துன்பியல் நிகழ்வு இடம்பெற்றது. ஆனாலும், 2004 ஆம் ஆண்டு உற்சவத்தின்பொழுது சந்நிதியானுக்கும் விநாயகப்பெருமானுக்கும் சித்திரத்தேர்கள் அமைக்கப்பட்டு இரண்டு மூர்த்திகளும் சித்திரத்தேரில் வீதி உலாவந்தனர். தற்போழுது 2005ஆம் ஆண்டு ஆறுமுகசுவாமிக்குத் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வேலைகள் முற்றுப்பெறும் நிலையில் உள்ளதால் சந்நிதியான், விநாயகப்பெருமான், ஆறுமுகசுவாமி ஆகிய மூன்று மூர்த்திகளும் முதன்முறையாகச் சித்திரத்தேரில் வீதி உலா வரும் கண்கொள்ளாக்காட்சி இடம்பெறவுள்ளது. உற்சவ காலத்தில் சந்நிதியானை வழிபட்டு அனைவரும் உய்வு பெறுவோமாக. ✸


## தெய்வீக ஸ்தலங்களில்



*யாழ்.கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழாவில் அம்பாள் தேரேறி வீதியுலாவரும் காட்சி. (ஒ-180)*



*தென்புலோலி மூச்சம்புலவு சிவன் ஆலயத்தில் சந்திர சேகர மூர்த்தம் எழுந்தருளச் செய்யப்பட்டது. இதன்போது வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் ஆலய பிரதம்குரு பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் சமயச் சடங்கை மேற்கொள்கிறார். (ஒ-173)*



*தும்பளை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் வட பத்திர காளியம்மன் ஆலய அலங்கார உற்சவ காலத்தில் இசைத் தொண்டாற்றிய செல்வரத்தினம் செல்வரஞ்சன் 'மங்கள இசை வாரிதி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். நீதிபதி பா.சுப்பிரமணியம் அவருக்குப் பட்டம் வழங்குகிறார்.*



*வல்வெட்டித்துறை ஆதிவைரவர் ஆலய வருடாந்தத் திருவிழாவின் போது தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய ஆசிரியர் இரா.செல்வவடிவேல் ஆலய நிர்வாகிகளால் கௌரவிக்கப்பட்டார். இதற்கான நிகழ்வில் அதிபர் ந.அரியரத்தினர் உரையாற்றுகிறார். வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சோ.தண்டபாணிக தேசிகர், ஆதிவைரவர் ஆலய பிரதம குரு தி.விக்னேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.*

## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38492)(26.19)



இதோ யாழ்.நகரில் அறிமுகப்படுத்துகின்றோம்

**மேதஹறணி (Meda Harani)**

உங்கள் இரத்தத்தில் உள்ள கொழுப்புச் சத்தைச் சரியான அளவில் கட்டுப்படுத்துகின்றது. ஒருமுறை பாவித்துப் பயன்பெறுங்கள். ஸ்ரீ லங்கா ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பு மேத ஹறணி (MEDA HARANI)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:-

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
(38492) யாழ்ப்பாணம். தொலைபேசி:222 2567


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1943 . 12 . 22 | 2003 . 07 . 31 |

திதி: 05.08.2005

**சீவரத்தினம் கனகசிங்கம்**

*(சிறுவர் நன்நடத்தைப் பாதுகாவல் அதிகாரி)*

*நீங்காத உங்கள் நினைவால்*
*இப்போதும் எம் கண்ணில் ஈரமது மாறவில்லை*
*எப்போதும் உம் நினைவால் ஏங்கியே இதயமது துடித்திருக்க*
*எமைத் தவிக்கவிட்டு சென்றதெங்கே!*

'அன்னை இல்லம்' கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (38479) (21.19.1725)

என்றும் உங்கள் நினைவில் ஏங்கும்: மனைவி, பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1934 - 04 - 14 | 2004 - 08 - 16 |



**திருமதி கந்தசாமி நல்லம்மா**

(நாவாந்துறை-யாழ்ப்பாணம்)

திதி: 05.08.2005 (வெள்ளிக்கிழமை)

பரிவுடனும், பாசத்துடனும், பண்புடனும்
எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு
சென்றாலும், உங்கள் நினைவலைகள்
என்றும் எங்கள் இதயத்தை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.


என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
அன்புக் கணவர், பாசமிகு பிள்ளைகள்,
மருமகன்மார்,மருமகள், பேரப்பிள்ளைகள்.

இல.7/6, கோயில் ஒழுங்கை,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(38524)(21.19.17)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 09 - 05 - 1923 | 17 - 08 - 2004 |



அமரர் **கந்தையா தங்கராசா**

(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், இலங்கை மத்திய வங்கி)

திதி : ஆடி பூர்வபக்க பிரதமை 05.08.2005

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

ஓராண்டு நிறைவுற்ற இந்நாளில் அன்னாரை நினைவு கூருகின்றோம்.

**-குடும்பத்தினர்.**

மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு,இணுவில்.

(38462)(32-21-19-17))

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.5

ஆனந்தசாகரம் நடத்தும் யோகசனம் பற்றிய கலந்துரையாடல் மற்றும் வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு கந்தர்மடத்தில் நடைபெறவுள்ளன.

கலந்துரையாடலில் இந்தியாவின் பெங்களூரைச் சேர்ந்த யோகா பயிற்சியாளர் என். சிவனேஸ்வரராஜா மற்றும் யோகா பயிற்சியாளர் எஸ் துரைராஜா ஆகியோர் யோகாசனம் தொடர்பான விளக்கங்களை வழங்குவர். (ஒ-202)

## மிருதங்க சமர்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஓக.5

லண்டன் ஆவர்த்தனா இசைப்பயிலகத்தின் முதல்வர் கலாவித்தகர் பரமசாமி கிருபாகரனின் மாணவன் யதீசன் செல்வகுமாரின் மிருதங்க சமர்ப்பண நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதின மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வாழ்த்துரையை கலாபூஷணம் க.ப.சின்னராசாவும் ஆசியுரையை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்துவர்.

நிகழ்வில் ரம்மியா கிருபானந்தன், சிந்துஜா கிருபானந்தன் ஆகியோரின் வயலின் இசை இடம்பெறும்.

மிருதங்க சமர்ப்பணத்தில் கலாசூடாமணி எஸ்.சண்முகராகவன் (பாட்டு), எஸ்.திவாகரன் (வயலின்), கே.அனந்தமோகன் (கஞ்சிரா), என். மாதவன் (கடம்), கவினாளி ஸ்ரீஸ்கந்த ராஜா (தம்புரா)ஆகியோரும் பங்கேற்பர்.(ஒ-202)

## செஞ்சிலுவைச்சங்க நிர்வாகிகள் தெரிவு

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையின் புதிய தலைவராக பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் துணைத்தலைவராக கே.பாலகிருஷ்ணனும் செயலாளராக எஸ்.செல்வகுமாரனும் பொருளாளராக எஸ்.விக்னேஸ்வரனும் நிர்வாகசபை உறுப்பினர்களாக பேராசிரியர் கே.குகபாலன், என்.குகராஜா, ஈ.மயில்வாகனம், எஸ்.தவராஜா, திருமதி ஜி.ஆசீர்வாதம், ஷஸ்.துரைரட்ணம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-202)

## தமிழீழ வைப்பகம்

### பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:** அலுவலர் (பயிலுநர்)

**தகைமைகள்:** ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் தொழில்நிர்வாகமாணி (BB A.) / வணிகமாணி (B.Com.) / விஞ்ஞானமாணி (B.Sc.) பட்டதாரியாக இருத்தல்வேண்டும்.

*அல்லது*

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி ஒன்றில் உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

*அல்லது*

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் வங்கியியல் பட்டப்படிப்பை (Diploma in Banking) நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத் திட்டம்:** 4,500 + 6,000

**அகவை எல்லை:** 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும் கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் ***இரத்தினம் மேல்மாடி, யாழ்.சாலை, கிளிநொச்சியில்*** அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியக மனிதவளப்பகுதிக்கு 11-08-2005 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுத்திப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி-44404)
(26-21-19-17)


## கருமாரி அம்மன் ஜோதிடம்

**ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.
இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன்-மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன், அறை எண் 9,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0779233191 (38399)(21.18.19)


## WALK IN INTERVIEW

**solidar**
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in SriLanka comprises of three international NGOs-Arbeiter Samariter Bund (ASB) Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).
We are currently at the planning stage for the Phase 3 Tsunami Shelter construction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in Kilinochchi/Paranthan.
Interested candidates MUST posses the minimum requirements stated below. Please walk in interview on Saturday, 6th August 2005 between 01:00 p.m. and 5.30 p.m.

**Position: Office Manager**
At least 3-5 years experience in busy office environment.
Good communication skills in both English and Tamil would be essential.
Knowledge in IT skills preferred.

Proven experience in the following -
- Organization of multiple departments.
- Providing innovative solutions for office organization and management
- Managing staff (approx 40)
- Providing support and advice to all staff.
- Facilitation communication and discussion between staff and departments.

Suitable candidates should be between 30-55 years of age.
Salary would depend on relevant skills and experience.

**Position: Head of Administration**
At least 2 years of experience in a similar role which should include the following: Staff management and office organization, management of relevant database systems. Good command of written and spoken English would be essential. Working knowledge on Word, Excel, PowerPoint and Access is a requirement.

**Position: Administrative Officer**
Provide administrative support to the Head of Administration. Duties will include maintenance of filing system, preparation of travel passes, arranging accommodation for guests, Photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

Solidar office 156,Jaffna Road, Paranthan.

Norwegian People's Aid — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SAH

## தேவை

எமது நிறுவனத்துக்கு
1. சிட்டை எழுதுநர் 2. கணக்கு எழுதுநர்
ஆகியோர் தேவை.
தொடர்பு
செல்வா எலக்ரிக்கல்ஸ்
43/1, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P.: 021-4590524 (38543)



## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவுள்ள பாரிய நீண்ட கால வேலைத்திட்டங்களில் கீழ் காணும் வெற்றிடங்கள் உள்ளன.

1. பொறியியலாளர் (சிவில்)
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
3. படவரைஞர் (Auto cad )
4. வேலைமேற்பார்வையாளர்

விண்ணப்பங்களை 10.08.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

யூரோவில்
மனிதவள முகாமையாளர்,
(38541)(29-34-12) 866, பருத்தித்துறை வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1919 | 2005 |
| 07 | 07 |
| 10 | 05 |

### அமரர் இராமன் சின்னவன் (சிமோல்)

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (05.08.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
(பரமேஸ்வரி வாசிகசாலை அருகில்)
(38544)(29-34-12)
தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கந்தப்பிள்ளை இராமலிங்கம்

தெல்லிப்பழை, கயந்தப்பையைப் பிறப்பிடமாகவும் பன்னாலை நெடுச்சியோலையை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை இராமலிங்கம் அவர்கள் 03.08.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்புக் கணவரும் பவளமலர், புற்கலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் அகஸ்டின், பிரதாப், கனகரத்தினம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2005) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பன்னாலை. (38553)(29-34-12) பிள்ளைகள்.


## புலமைப் பரிசில் பரீட்சை

06.08.2005
அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

IBMS
# 410, K.K.S. Road,
Jaffna.
T.P. No: 021 222 8232
(சி-44427)


## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் சுந்தரம் ஆசாரியார்



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சுந்தரம் ஆசாரியார் அவர்கள் நேற்று (04.08.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

95/10, ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (38554)(29-12-34)

### சின்னையா சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - நிலஅளவைத் திணைக்களம்)



கரம்பைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் விநாயகர் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சின்னத்தம்பி அவர்கள் நேற்று (04.08.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.

விநாயகர் வீதி,
கல்வியங்காடு. (38555)(29-12-34)

## மரண அறிவித்தல்கள்

### வெற்றிவேலு சபாநாயகம்

(ஓய்வுபெற்ற யாழ்.மாவட்டக் கல்விப் பணிப்பாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியில் வசித்து வரும் தற்பொழுது கொழும்பில் வசிப்பவருமான வெற்றிவேலு சபாநாயகம் காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சர்வலோகநாயகம், சாந்தநாயகி, சௌபாக்கியநாயகி, நல்லநாயகம் ஆகியோரின் சகோதரரும் கமலினி, சசிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேந்திரா, வசந்தராணியின் அன்பு மாமனும் சுமித்திரன், கோசலா, சாரங்கா, தேனுகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, பொரளை கனத்தை இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

T.P. No : 0112 694914

தகவல்:
(சி-44428)(29-12-34) சி.யோகேந்திரா (மருமகன்).

### திருமதி சிவக்கொழுந்து இராமசாமி



தெருமூடிமடத்தடி, புலோலி வட.மேற்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து இராமசாமி 01.08.2005 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2005) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் கருகம்பன் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
புலோலி வடமேற்கு,
அல்வாய். (38542)(29-12-34)
சின்னையா இராமசாமி (கணவன்).

### திருமதி கனகம்மா இராசா



அல்வாயைப் பிறப்பிடமாகவும் இல.84/1, முரசுமோட்டை முதலாம் யூனிற்றை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கனகம்மா இராசா (ஓய்வுபெற்ற அதிபர், முரசுமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை) அவர்கள் நேற்றுமுன்தினம் (03.08.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் செல்லையா - பாறுபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இராசாவின் பிரியபத்தினியும் இளங்கோ (லண்டன்), காலஞ்சென்ற பாலகுமரன் ஆகியோரின் அன்புத் தாயும் தங்கவேலு (இ.போ.ச. நடத்துநர், கிளி.), நாகரத்தினம் சிவபாதசுந்தரம் (தம்பி), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறீ சிவசங்கரநாதன், சௌந்தரராசா, திருச்செல்வம், தங்கராசா, சிவப்பிரகாசம் (சுந்தரம்), கண்ணன், சிவமலர், நளாயினிதேவி (பேபி), மகேஸ்வரி (ஆச்சி), சிவஞானம் (காலஞ்சென்ற மைத்துனியும்) கனகரத்தினம், நவரத்தினம் மதியழகன் (குட்டி- லண்டன்), கெங்காதரன், நந்தகுமார், இராஜேஸ்வரி, சரோஜினி ஆகியோரின் அன்பு மாமியும் அமேஸ், பிரசாந், காலஞ்சென்ற தனுஷாந், சங்கவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை 07.08.2005 அஞ்சலிக்காக காலை 9 மணியளவில் ஐயரத்தன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
கா. தங்கவேல்
(சி-44423)(29-12-34) (சகோதரன் - தம்பி).


## TR TEC

TECH

புதிய கட்டடத் திறப்பு விழாவும் இங்கு கற்கைநெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பக் கண்காட்சி நிகழ்வும் நடைபெறவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: கிளி. தொழில்நுட்ப கல்வி நிறுவனம்
A-9 வீதி, கிளிநொச்சி.
காலம்: 05.08.2005
குறிப்பு: 05,06,07 ஆகிய மூன்று தினங்களிலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கண்காட்சி நிகழ்வு நடைபெறும்.
(சி-44424)(29-34-12)



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



தாஸ்

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு புகழ் பரத், ரேணுகா மேனன்

பெப்ரவரி 14

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த

பிரியசகி

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.

நாதன்ஸ் சினிமா



சினேகா, கிரண், வடிவேல் நடித்த
சின்னா
கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே).



## INTERNATIONAL SCHOOL MANIPAY
## COMMENCINE JANUARY 2006
## VACANCIES

- Experienced Graduate Teachers
- Administrator - Immediate
- Head of Accounts Division

Salary Attractive and Negotable.
We are Looking for people who will work In a 'School with a Difference' No Personal Callers / Influence is a Disqualification.
(38460)(29-34-12)
HUMEDICA INTERNATIONAL LANKA, SANGARAPILAI RD, MANIPAY.

# படையினர் சூட்டு இளைஞன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்துக்கு வந்த படையதிகாரி ஒருவர் உள்ளே முடிவெட்டிக்கொண்டிருந்தார். அவருக்குப் பாதுகாப்பாக கடை வாசலில் வெளியே இரு சிப்பாய்கள் நின்றிருந்தனர் என்றும் -

சிப்பாய்களில் ஒருவர் திடீரென கடைச் சிப்பந்திகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் -

அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதில் திருகோணமலையைச் சொந்த இடமாகக் கொண்டவரும் கோண்டாவில் மிஷன் பாடசாலை வீதியில் வசித்தவருமான ஜெயசீலன் காந்தரூபன் (வயது-23) என்பவர் உயிரிழந்தார். அவரது சக ஊழியரான கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த கே.லோகதாஸ் (வயது-24) படுகாயமடைந்தார்.

உயிரிழந்த காந்தரூபனின் வலது கண்ணில் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்திருந்தது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவத்தையடுத்து அதனுடன் தொடர்புபட்ட படையினர் மூவரும் அங்கிருந்து இணுவில் படைமுகாம் நோக்கி ஓடினர். அதற்கிடையில் சத்தம்கேட்டு வீதியில் திரண்ட இளைஞர்களும், பொதுமக்களும் ஆத்திரம் மேலிட்டதால் அவர்கள் மீது கற்களை வீசித் தாக்கினர் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சூட்டுக்கு இலக்கான இளைஞர்கள் இருவரையும் பொதுமக்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக எடுத்துச் சென்றனர். அங்கு சிகிச்சை பயனளிக்காது காந்தரூபன் உயிரிழந்தார். லோகதாஸ் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார்.

### பொதுமக்கள் ஆத்திரம்

சம்பவத்தைக் கேள்விப்பட்ட இளைஞர்களும் பொதுமக்களும் நூற்றுக்கணக்கில் வீதியில் கூடினர். அங்கு வந்த பொலீஸார் மீது ஆத்திர மேலீட்டால் அவர்கள் கற்களை வீசித் தாக்கினர். இணுவில் சந்தியில் ரயர்களைப் போட்டு எரித்து போக்குவரத்துத் தடைகளை ஏற்படுத்தினர்.

இதனையடுத்து, சிறிது நேரத்தில் கலகம் அடக்கும் பொலீஸார் அங்கு குவிக்கப்பட்டனர். யாழ்ப்பாணம் நகரில் இருந்து மேலதிக பொலீஸார் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுடன் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவும் வந்திருந்தார்.

இணுவில் துரை வீதியில் கூடியிருந்த மக்களைப் பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசிக் கலைத்தனர். பின்னர் அத்தியட்சகர் விஜேவர்த்தனவும் மேலும் இரு பொலீஸாரும் மக்களைநோக்கிச் சென்று அவர்களுடன் பேச முயன்றனர். அப்போது ஏற்பட்ட இழுபறியில், திடீரென பொலீஸ் அத்தியட்சகரை மக்கள் கூட்டம் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு ஓடியது. மறைவிடம் ஒன்றுக்கு அவர் கொண்டுசெல்லப்பட்டார். நேற்று மாலை வரை அவர் இருந்த இடம் பற்றிய தகவல்கள் எதுவும் பொலீஸாருக்குத் தெரியவரவில்லை.

### அத்தியட்சகர் சடலம்

மாலை 6 மணியளவில் பொலீஸ் அத்தியட்சகர் விஜேவர்த்தன இணுவில், பாலாவோடை என்ற இடத்தில் ஒழுங்கை ஒன்றினுள் வெட்டுக் காயங்களுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தார் என்று, அதனை நேரில் கண்டார்கள் என்று கூறிய சிலர் தெரிவித்தனர்.

அவரது உடலில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன என்றும், தலை மற்றும் கழுத்துப் பகுதிகளில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது என்றும் அவர்கள் கூறினர்.

தகவல் அறிந்த பொலீஸார் விரைந்து அவரை மீட்க நடவடிக்கை எடுத்தனர். எனினும், அவர் உயிரிழந்துவிட்டார் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க நேற்றிரவு தெரிவித்தார்.

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரின் சடலம் சீருடை அகற்றப்பட்ட நிலையில் கிடக்கக் காணப்பட்டது. 55 வயதான சார்ள்ஸ் விஜேவர்த்தன குருநாகலைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. நேற்றிரவு அவரது சடலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

### பெரும் பதற்றம்

சூட்டுச் சம்பவம், பொலீஸ் அத்தியட்சகரின் கொலை ஆகிய சம்பவங்களால் இணுவில் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பெரும் பதற்றம் உருவாகியது. பெரும் எண்ணிக்கையான படையினரும் பொலீஸாரும் அந்தப் பகுதிகளில் நேற்றிரவு குவிக்கப்பட்டனர்.

### ஊரடங்கு உத்தரவு

நேற்றிரவு உடனடியாகவே பொலீஸார் ஊடரங்குச் சட்டத்தை அமுல்செய்தனர். வலிகாமம் பொலீஸ் பிரிவுகளில் ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது பற்றிய அறிவித்தல் இலங்கை வானொலியின் யாழ்.சேவை, தென்றல் ஒலிபரப்பு ஆகிய வானொலி சேவைகள் ஊடாக அறிவிக்கப்பட்டது. ஊரடங்கு அறிவிப்பு சரியான விதத்தில் பொதுமக்களை எட்டாததால் நேற்றிரவு குடாநாடு முழுவதும் பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

வலிகாமத்தில் சுன்னாகம், தெல்லிப்பழை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம், கோப்பாய், அச்சுவேலி, இளவாலை ஆகிய பொலீஸ் பிரிவுகளில் நேற்றிரவு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் நாளை சனிக்கிழமை காலை வரை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று பொலீஸ் தலைமையகம் அறிவித்திருக்கின்றது.

சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்காகவும் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதியும் ஊரடங்கு அமுல் செய்யப்படுவதாக பொலீஸ் தலைமையகம் தெரிவித்தது.

(இ-3-86-49-190)

# கொழும்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய முக்கியஸ்தர்களும் சந்திப்பில் கலந்து கொண்டனர். பொதுக்கட்டமைப்பை நடைமுறைப் படுத்துவது மற்றும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பயணப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்பன தொடர்பாகவும் நேற்றைய பேச்சுகளின் போது ஆராயப்பட்டிருக்கிறது.

### வன்னி விஜயம்

இதேவேளை, மேற்படி விடயங்கள் தொடர்பான அரசின் யோசனைகளுடன் நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் இன்று கிளிநொச்சி செல்லவுள்ளார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரை சந்தித்துப் பேசும் அவர் அரச சமாதான செயலகப் பணிப்பாளரை இன்றுமாலையே சந்தித்து புலிகள் தெரிவித்தவற்றை விளக்குவார்.

கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் பிரதமர், எதிர்கட்சித்தலைவர் மற்றும் பல அரசியற்கட்சிகளின் பிரமுகர்களையும் விடர் ஹெல்கிஸன் சந்திக்கவுள்ளார்.

நோர்வேயில் அடுத்த மாதம் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் ஹெல்கிஸனின் கன்ஸர்வேட்டிவ் கட்சி ஆட்சியில் இருந்து அகலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி ஒருநிலைமை ஏற்பட்டாலும் சமாதானத்துக்கான அனுசரணைப் பணி தங்குதடையின்றி நடைபெறும் என்று அரசு - புலிகள் இருதரப்பினருக்கும் விளக்குவதும் ஹெல்கிஸனின் இந்த விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-க)

# விசேட பிரஜை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் சிரேஸ்ட பிரமுகர் ஒருவர் ஊடாக ஐ.தே.க. தலைமையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். ஆனாலும் அதற்கான பிரதிபலிப்பை ஐ.தே.க. தலைவர் இன்னமும் வெளிப்படுத்தவில்லை.

தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா, மலேஷியாவின் மஹ்தீர் முஹம்மத், சிங்கப்பூரின் லீகுவான்யூ ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள கௌரவ அந்தஸ்தை 'விசேட பிரஜை' என்ற அடிப்படையில் பெறுவதன் மூலம் தொடர்ந்து அரசியல், சமூக மற்றும் பொதுப் பணிகளில் தாம் ஈடுபடுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி முயல்கிறார் எனத் தெரிகிறது.

'விசேட பிரஜை' என்ற அந்தஸ்து பெற்ற ஒருவரை நீதிமன்றம் வழக்கு விசாரணைகள் என்பவற்றிக்கு அழைக்க முடியாதென்பது குறிப்பிடத்தக்கது. (இ-க)

# சிப்பாய்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணுவில் பாலோவேடைப் பகுதியில் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனவின் சடலத்தையும் நேற்றிரவு நீதிவான் சென்று பார்வையிட்டார். சடலத்தில் பொலீஸ் சீருடை அகற்றப்பட்டிருந்தது என்றும், சாரம் அணிந்த நிலையிலேயே சடலம் காணப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

சடலத்தைப் பார்வையிட்ட நீதிவான் அதனை கொழும்புக்கு அனுப்பி பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுன்னாகம் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். அதன்பின் பொலீஸ் அத்தியட்சகரின் சடலம் அவ்விடத்தில் இருந்து பலாலி இராணுவ மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

(இ-3-86-49)

# எட்டு தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொட்டி பதுளைப் பகுதிகளில் ஆங்காங்கே புலனாய்வுப் பொலீஸாரும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த நிலையில் பதுளைப் பொலீஸாருக்கு நேற்றுமுன்தினம் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து ஹாலி - எல, டிக்வெல்லத் தோட்டத்தைச் சுற்றிவளைத்த பொலீஸார் அங்கு தோட்டக் குடியிருப்பில் தங்கியிருந்த 8 இளைஞர்களை கைதுசெய்தனர் அவர்களால் பயனபடுத்தப்பட்டதாகக் கூறப்படும் டொல்பின் வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

டிக்வெல்ல தேட்டத்தைச் சேர்ந்தவர்களான வி.நடேசன் (வயது-45), வி.சத்தியசீலன் (வயது - 29), அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்களான விநாயகமூர்த்தி (வயது-29), திருஞானசெல்வம் ஞானபாக்கியம் (வயது-28) கல்லாறைச் சேர்ந்த துரையப்பா நிதசன்ஜெயராஜ் (வயது-28), களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த சிங்கராஜன் விஜயராசா (வயது-32), பொத்துவிலைச் சேர்ந்த கந்தசாமி பிரபாகரன் (வயது-27), பெரிய கல்லாறைச் சேர்ந்த வி.இராஜேந்திரன் (வயது-27) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

கைதுசெய்யப்பட்வர்களுக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் ஜனாதிபதி பதுளைக்கு விஜயம் செய்வதால் அதன்முன்னேற்பாடுகளை கருத்தில் கொண்டு மேற்படி எட்டுப்பேரும் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் பதுளைப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று இவர்கள் பதுளை நீதிவான் பிரதீப் அபேரட்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (இ-க)

# துக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அன்றைய தினம் சகல சிகையலங்கரிப்பு நிலையங்களையும் மூடி இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளுமாறும் சிகையலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் கேட்டிருக்கின்றது.

சூட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினரை நீதியின்முன் நிறுத்துமாறும், நீதி கிடைக்காவிடின் மக்கள் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் ஒன்றியம் தெரிவித்திருக்கின்றது. (இ-190)


**பணியாளர்கள் தேவை**

- கணனி இயக்குநர்
- தொலைபேசி இயக்குநர்

அனுபவமுள்ளவர்களும் ஆர்வமுள்ளோரும் தபால் மூலமாகவோ நேரடியாகவோ தொடர்புகொள்ளவும் .

**கணேசன் கொமினிக்கேசன்ஸ்**
கே.கே.எஸ். றோட்,
கொக்குவில் சந்தி.
T.P. :021 222 2585
(சி-44426)

**காணவில்லை**



காரைநகர் களபூமி, பொன்னாவளையைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளையை கடந்த 4 நாள்களாகக் காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**திருமதி நடராஜா பாக்கியம்,**
186/14A, குருநாதர் லேன்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.:- 0714182389.
(சி-44429)

**கணக்கீடு**
A/L2007
தொங்கல் கணக்கு
ஆரம்பம்:
நாளை 1.30 p.m.
A/L 2006 புதிய பிரிவு
கம்பனி
ஆரம்பம்:
நாளை 2.30 p.m.
S.தவா
B.Com (Hons) Acc.Spl.
SHAMROCK
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
(38551)

Special Offer **Softview Computer College**
50% Discount
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170,
0777846811

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office | 5 Months | 875/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 1375/= |
| Diploma in Computer Programming | 8 Months | 2800/= |
| Diploma in Hardware Engineering | 4-5 Months | 1800/= |
| Diploma in Network Engineering | 4 Months | 2850/= |
| Diploma in Visual Basic | 4 Months | 1375/= |
| Diploma in Computer Science | 4 Months | 1375/= |
| Diploma in AutoCAD | 4 Months | 1375/= |
| Diploma in C++ | 4 Months | 1375/= |
| Diploma in Internet E-Mail | 2 Months | 750/= |

பிரிவு IV ஆரம்பம் 06,10.08.2005
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

இல்லை, தவறு... ?
:: ::: ::: ::: ::: வேடிக்கை

**HND**
பிரிவு II க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
Higher National Diploma
கற்கை நெறி பிரிவு II க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் உங்கள் பதிவுகளிற்கு முந்திக்கொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு :
Director
IIS CITY CAMPUS
#181, Navalar Road, Jaffna.
☎ 021 222 8060

**5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களே!**
உங்கள் சந்தேகங்களை நீக்கி பதற்றத்தைப் போக்கிட, புலமை மிக்க ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்படும்.
**மாபெரும் வழிகாட்டல் கருத்தரங்கு**
எதிர்வரும் 6 ஆம் (சனி), 13 ஆம் (சனி), 17 ஆம் (புதன்) திகதிகளில் நேரம்: காலை 9 மணி - 5 மணி வரை (பு.நே.)
- அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.
- அனுமதிக்கு முந்துங்கள்

**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(38532)

**CATWAS.COM**
COMPUTER ACADEMY
NO.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
T.P.: 021 222 3805
Microsoft Office
Desk Top Publishing
Duration: One Month / Two Months / Three Months
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கவுள்ளோம். இதற்கான பிரிவுகள் அனைத்தும் இம்மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் ஆரம்பிக்கப்படும் என்பதை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.
Internet & E - Mail
வகுப்புகள் யாவும் 07.08.2005, 08.08.2005 ஆரம்பமாகும்
Online (சி-44177)

3 மாத காலத்தில் World Class தரத்தரம் பெற அரியசந்தர்ப்பம்.
**City & Guilds London U.K.**
**Examination December 2005**
**Telecom. Systems Engineering**
Certificate Level - with full practicals
Course Contents: Computer Technology Mobile Radio-Cellular Phone -PSTN-Radio-TV-Optical Fibre-Digital Network & Data Communication
உங்கள் அனுமதிகளுக்கு 09,10/08/2005 அன்று JTI, No. 7 Palaly Road, Jaffna.(T.P: 0212223335)இற்கு நேரில் வரவும்
**APSS International,** Colombo 06.T.P: 011-25361587


# மரண அறிவித்தல்

## நாகமுத்து நாகம்மா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து நாகம்மா அவர்கள் நேற்று (04.08.2005)வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (சி-44430)(29-12-34)

தகவல்:
ப.தர்மகலராஜா (தருமு - மருமகன்),
நா.பாலசுப்பிரமணியம் (மகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.